[illegible]
V1. No.7 16 Feb 1928


ണ211, N28KN
N28·1·7
188990·

666

Reg. No. M. 2324.

தனிப்பிரதி ரூ. 0 3 0

# கலா நிலயம்

வியாழன்தோறும் வெளிவரும்
வாரப் பத்திரிகை.

வருஷ சந்தா
இந்தியா, பர்மா, ஸிலோன் ரூ. 7 8 0
புற நாடு ... ... ரூ. 9 0 0

காரியாலயம்:--
No. 11, வெள்ளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

8 MAY 1928 MADRAS

Vol 1.] 1928ஞ பிப்ரவரிமீ 16உ [No. 7.

பொருளடக்கம்.

| | | பக்கம். | | | பக்கம். |
|---|---|---|---|---|---|
| 1. | செய்யும் கருமமும் செயல் வகையும் | 121 | 5. | காந்திமதி (A novel) T. N. சேஷாசலம் B. A. B. L. | 131 |
| 2. | நாலடி நானூற்றின் திறம் T. A. கனகசபாபதி முதலியார் | 122 | 6. | மதிப்புரை | 135 |
| 3. | புரந்தரனர் பெருந்தவம் R. முத்தையர் | 124 | 7. | மலர்வனம் | 137 |
| 4. | தமிழ்ப்பாடம். | 128 | 8. | வர்த்தமானம் | 138 |

## கலா நிலயம்.

### செய்யும் கருமமும் செயல் வகையும்.

188990

VI

பயனை கருதிப் பாராட்டும் ஒரு பழக்கத்தினல் நல்லதேயான நினைவுகள் தாம் நலம்பழுத்த கனியாக முதிராமல் இடைவெதும்பி உதிர்ந்திடு மிவ்வுலக இயல்பும் அன்னதற்குக் காரணமும் முன்னர் காட்டினேம். இத்தகைய இடையூறு நுழையாமல் நம் வாழ்க்கைஅமைவதற்கு அழகென்னும் அது வொன்றே ஆதாரமாகு மென்றும் சொல்லியதைச் சிறிதளவு இங்கு விரித்துரைப்பது தகுதியாம்.

கணிதம், இலக்கணம், தர்க்கம் அனைய சாஸ்திரங் களைப் பயில்கின்ற வொருவன் சூத்திரங்களை மாத்திரம் பாடம் செய்வதால் பயன் எய்தான். எதனையும் பயின்று தேர்கின்ற முறையினில், பாடம் பயிற்சி என இருவகைகள் அமைந்துள் ளன. அவ்விரண்டும் ஒன்றினிற்கொன்று ஒருவாறு இன்றியமையாதன என்பது உண்மையேயாயி னும் பாடத்தினும் பயிற்சியே முக்கியமான தென்ப தற்கு ஐயமில்லை. நன்னூலின் சூத்திரம் ஒன்று கூடத்தெரியாமலே பலர் பிழைகள் பல இல்லாது தமிழ் எழுதக் கூடியவராகின்றனர். பழக்கத்தி னல் விளையும் பயன் இது. சூத்திரம் கூறு கின்ற விதிகளுக்கு, இவர் பழக்கப்பயிற்சிவாயி லாக இணங்க இயல்கின்றது. இதற்கு மாருகத் தமிழ்மொழியின் இலக்கியப் பயிற்சியில்லாதவன் எத்தனைதான் சூத்திரங்களைப் பாடம் செய்தாலும் ஒரு வாக்கியம், பிழை கிடக்கட்டும், எழுதுவதற் குக்கூட அவன் தகுந்தவனல்லன். தமிழ்ப் பேச்சே தெரியாத ஒரு ஆங்கிலேயன் நன்னூல் தொல்காப் பியங்களிலிருக்கின்ற அத்தனை சூத்திரங்களையும் உரையோடும் நெட்டுருச் செய்திருந்தாலும், தமிழி னல் அவன் கண்டபயன் யாது. பழக்கத்தினல் தானுக ஏற்பட்ட ஒருணர்வை விதிகள் பின் தெளி வித்து மேன்மேலும் வளர்க்கவே சாதனமாகும். கற் சட்டி,கட்குடம் என்று எழுதுகின்றவர்களெல்லாம், 'ல ள வேற்றுமையில் ற ட வலிவரின் ஆம்' என்னும் நன்னூல் விதி தெரிந்தோ எழுதுகின்றனர்! கற் சட்டி என்ற பழக்கத்தால் எழுதுபவன் பற்பொடி யென்றும் தானே எழுதிவிடுவான். ' ஆனல் இந்தப் பழக்கத்தளவோடு நிற்பவனுக்குப் புட்குலம் என் றொரு தொடர் வருங்கால் சிறிது இடருண்டாக லாம். விதியும் தெரிந்திருக்குமாயின் புள் குலம் எனப்பிரித்துணர இயலும். எனவே வழக்க அனு பவங்களால் தோன்றிய ஓர் உணர்வேனும் அறி வேனும் ஐயம் திரிபு இன்றி நிலைப்பதற்கும் வளர்வ தற்கும் விதிகள் பயன்படுமே யல்லாது அவைதாமே தம்மளவில் தனி நின்று சிறிதேனும் உதவமாட்டா.

வழக்கத்தால் ஏற்படுவது வாழ்க்கை. அது நல்ல தாய் நடக்கவேண்டுமாயின் வழக்கங்கள் நல்லன வாய் அமைதல்வேண்டும். எவ்விதப் பயனையும் முன் னிட்டு நினைக்கின்ற பழக்கம் நல்ல பழக்கமன்று என்று விரித்துரைத்துள்ளோம். நினக்கொரு நலம் எதிர்பாராது நினைவையும் செயல்களையும் அமைத் துக்கொள், என்பதுவிதி. இந்த விதிவரையில் தெரிந்திருப்பதும், தமிழ்பேசப் பயிலுமுன் ஆங் கிலேயன் நன்னூல் முடித்திருப்பதும் ஒன்றேதான்.

ஆதலால், பொருளோ யாக்கையின்சுகமோ அல்லது புகழோ கிடைக்குமென்று பின்பற்றாமல், அவை நின்று பிரிந்திருந்தும் மனதைத் தன் வசப்படுத்திக் கொள்ளக்கூடியது ஏதேனுமொன்று உளதாயின் அதனோடு இடைவிடாமல் பழகுகின்ற பயிற்சிதான் அவ்விதி உரைக்கும் நிலைக்குத் தானாகவே நம்மைக் கொண்டுபோய்ச் சேர்க்கவல்லது.

மேற்சொன்னவாறு மனதைத் தன் வயப்படுத்திக் கொண்டு, அதனால் என்ன பயன் பெறலாகும் என்னும் நினைவு புகுத்தாமல், தன்னையே தன் பொருட்டே பாராட்டச் செய்வது ஒன்று உளது. இயற்கையின் காட்சிகளைக் காணுந்தோறும், இன்னிசை கேட்குந்தோறும், நன்மணங் கமழுந் தோறும், நாம் அதை அனுபவிக்கின்றோமே யன்றி அதனால் எனக்கு என்ன பயன் என்று வினவப் புகுகின்றதில்லையே. சித்திரப் படங்களையும் சிற்பச் சிலைகளையும் காவிய நூற்களையும் கொண்டாடும் சமயத்தில், அவைகளால் எனக்கு என்ன பயன் என்ற மனம் சிறிதேனும் சிந்திக்கின்றதோ. ஆதலால் ஒன்றினால் உண்டாகக் கூடிய பிறிதொன்றை நினையாமல் அவ்வொன்றினை அதற்காகவே நாடியடைந்து அதனது நலத்தையே பாராட்டும் தன்மையன, இயற்கைக் காட்சியும் இசையும் மணமும் சித்திரமும் சிலையும் காவியங்களும். வகைகளிலே இவை தம்முள் மிக்க வேறுபாடுடையன. எனினும் இவைகளுக்கு அமைந்திருக்கின்ற இந்தத் தன்பயன்தூண்டா ஒற்றுமையைக் கருதுமிடத்து அவை அனைத்திற்கும் பொதுத்தன்மை ஒன்று இருத்தல் வேண்டும். அத்தன்மைதான் அழகு. அழகைக் கொண்டு தன் மனதை நிறைவிக்கின்றவன் நிஷ்காம்யமாய் விவகரிக்கின்ற பழக்கத்தினில், பகவத்கீதையின் இரகசியம் இது வென்று தெரியாமலே, தனது வாழ்க்கையை அமைத்துக் கொள்கின்றவனாகின்றான். "சூரியன் நேற்று அச்சோலையில் மறையக் கண்டேன், பரவசமாயினேன். குயிலொன்று கூவக் கேட்டேன், பரவசமாயினேன். தென்றலை உலவித் தவழ்ந்தது, பரவசமாயினேன். சித்திரச்சாலை சென்றேன், சிந்தையே மறந்து போயினேன். கம்பரைப் படித்தேன், அதனுள் என் கருத்தெல்லாம் ஆழ்ந்தது. போயது குழவி தவழ்ந்த என் மெய் தன்னையே மறந்து நின்றது" இன்னவிதப் பரவசம் எய்தி மெய்தி மெய்யும் மனதும் தம்மையே மறக்குந்தோறும் ஒருவன் தன்னைத்தான் கட்டிப்பிணைத்துங் கொண்டாடும் நினைவும் தொழிலும் தவிர்த்துப் பிறவற்றை அவைகளுக்காகவே பாராட்டும் பழக்கத்தில் பொருந்துகின்றான். இதுதான் இயற்கையால் ஏற்படுகின்ற பயிற்சி. இந்தப் பயிற்சியை இடைவிடாது செய்கின்ற வாழ்க்கையுடையவனுக்கு மற்றெல்லா வகைகளிலும் தோன்றுகின்ற நோக்கங்களும் அந்நோக்கங்களுக்கு இணங்கிய செயல்களும் தன்னை ஒழித்த தன்மையனவாகவே அமையும். அமையுமெனில், முன்னிங்கு விரித்துரைத்துள்ளவாறு அழகிலே ஆழ்ந்து தூயனாய்ச் சத்தியநிலை எய்துகின்றான்

மனம்போல வாழ்வு என்னும் மூதுரை, ஆதலால் இருவிதத்திலும் மெய்யாகின்றது. அழகு நிறைந்த உள்ளம் புறத்திலும் அழகையே கண்டு, சிருஷ்டியுடன் தானும் ஒன்றாகிப் பின் வேற்றுமையில்லாமையால் தன்னையே துறப்பதொன்று. மற்றது, அழகினில் பழகுகின்ற மனம் அப்பழக்கத்தால் அறவுரையின் நற்பயனும் நற்செயலின் மெய்ப்பொருளும், அவைதாம் எவையென்று தெரியாத காலத்தும், எய்துகின்றதாகும். இவ்விருவகைகளிலும் மனது அழகுடன் இணங்கி இருக்கின்ற காலத்தில் அம்மனதைப் பண்பட்ட மனது என்று அழைக்கின்றோம். இப்படிப் பண்படச் செய்வது எதுவானாலும் அது வொன்றே கல்வி. மற்றவெல்லாம் வேறு. ஆதலால் அழகின்பயிற்சிதரும் அனைத்தும் கல்வியாகின்றன. அவ்வாறு கருதினால், கலைகளும், இயற்கையமைப்பும், நற்குடி வாழ்க்கையும், குழவியின் மழலைச் சொல்லும், மாதரிடம் கோலமும், யாவும் கல்வியே.

## நாலடி நானூற்றின் திறம்.

(117 வது பக்கத் தொடர்ச்சி.)

தெண்ணீர்க் குவளை பொருகயல் வேலென்று
கண்ணில்புன் மாக்கள் கவற்ற—விடுவேனோ
வுண்ணீர் களைந்தக்கா னுங்குநுன் றிட்டன்ன
கண்ணீர்மை கண்டொழுகு வேன். (44)

[உள்ளே இருக்கின்ற நீரை எடுத்துவிட்டால் நுங்கைத்தோண்டி யெடுக்கப்பெற்ற பனங்காயின் ஓடு போன்ற கண்களின் அற்பமான தன்மையைக் கண்டு வரும் யான் அக்கண்களைக் குவளை மலரென்றும் கயல் மீனென்றும் வேலென்றும் கண்ணிலாப் புன்மாக்கள் (என்மனத்தைக்) கவலைப்படுத்த விட்டுவிடுவனோ யான் கொண்ட துறவை.]

முல்லை முகைமுறுவன் முத்தென் றிவைபிதற்றுங்
கல்லாப்புன் மாக்கள் கவற்ற—விடுவனோ
வெல்லாருங் காணப் புறங்காட் டுதிர்ந்துக்க
பல்லென்பு கண்டொழுகு வேன். (45)

[யாவரும் அறிய சுடுகாட்டில் சிந்திக்கிடக்கின்ற பற்களாகிய எலும்புகளின் தன்மையைக் கண்டுவரும் யான் அப்பற்களை முல்லை அரும்புகளென்றும் முத்துக்களென்றும் சொல்லிக்கொண்டு திரிகின்ற கல்லாத புன்மாக்கள் என்மனத்தைக் கவற்ற விட்டுவிடுவேனோ யான்கொண்ட துறவை]

இவ்விரு பாக்களில், ஆசிரியன் மன உறுதியையும் தனிச்சொல்லின் அமைப்பையும், அவன் மனத்தைக் கவற்ற வருவோர்க்குக் கொடுக்கும் அடைமொழியையும் நன்குநோக்குக

செய்வர் செயற்பா லவை (147)
செய்வர் செயற்பா லவை (153)
செய்வர் செயற்பா லவை (185)

செல்லா விடத்துங் குடிப்பிறந்தார் செய்வன
செல்விடத்துஞ் செய்யார் சிறியவர் (149)

[வறுமையாற் பீடிக்கப்பட்ட காலத்திலும் உயர்குடியிற் பிறந்தோர் செய்யும் நற்கருமங்களைத் தாழ்ந்தகுடிப் பிறந்தோர் செல்வம் உண்டான காலத்திலும் செய்யார்]

சாஅ அயக் கண்ணும் பெரியார்போன் மற்றையா
ராஅ அயக் கண்ணு மரிது (184)



[வறுமையால் தளர்ந்த விடத்தும் பெரியோர்போல் நற்கருமங்களைச் சிறியோர் செல்வமுடையோரான காலத்தும் செய்தல் அருமை]

எட்டைப் பருவத்து மிற்பிறந்தார் செய்வன
மோட்டிடத்துஞ் செய்யார் முழுமக்கள். (358)

[ஏழ்மைப் பருவத்தும் உயர் குடியிற் பிறந்தோர் செய்வன கீழ்க்குலமக்கள் செல்வம் உண்டான காலத்தும் செய்யார்]

பெரியவர் கேண்மை பிறைபோல நாளும்
வரிசை வரிசையா நந்தும்—வரிசையால்
வானூர் மதியம்போல் வைகலுந் தேயுமே
தானே சிறியார் தொடர்பு (125)

[பெரியோர் நேசம் இளஞ் சந்திரன் போலத் தினந்தோறும் வரிசை வரிசையாக வளரும்; அற்பர் தொடர்பு வானூர் சந்திரன்போல் நாள்தோறும் முறையாகத் தனக்குத்தானே குறைந்து விடும்.]

நளிகடற் றண்சேர்ப்ப நாணிழற் போல
விளியுஞ் சிறியவர் கேண்மை—விளிவின்றி
யல்கு நிழற்போ லகன்றகன் றோடுமே
தொல்புக ழாளர் தொடர்பு (166)

[பெரிய கடலினது குளிர்ந்த துறையை யுடைய பாண்டியனே, சிறியோர் கேண்மை உதய காலத்துச் சாயை போல வரவரச் சுருங்கும். பெரியோர் தொடர்பு சாயங்காலத்துச் சாயை போல அகன்று அகன்றோடும்.]

தெரியத் தெரியுந் தெரிவிலார் கண்ணும்
பிரியப் பெரும்படர்நோய் செய்யும்—பெரிய
வுலவா விருங்கழிச் சேர்ப்பயார் மாட்டுங்
கலவாமை கோடி யுறும் (168)

[பாண்டியனே, விளங்க ஆராயும் ஆராய்ச்சி இல்லாதவரிடத்தும் ஒருவன்கூடிப் பின் பிரியிற் மிக்க நினைவுக்கு ஏதுவான துன்பத்தை அப்பிரிவு செய்யும்; ஆதலின் சிநேகம் செய்து பிரிதலின் சிநேகம் யாரிடத்தும் செய்யாமையே மிகவும் சிறந்தது]

மரீஇப் பலரோடு பன்னாண் முயங்கிப்
பொரீஇப் பொருட்டக்கார்க் கோடலே வேண்டும்
பரீஇ யுயிர்செகுக்கும் பாம்பொடு மின்னா
மரீஇப் பின்னைப் பிரிவு. (220)

[பலரொடும் சேர்ந்து பலநாள் கலந்து தம்குணமும் அவர் குணமும் ஒத்துப் பலரும் நன்மதிக்கும் தன்மையுடையவர்களைச் சிநேகம் செய்துகொள்ளுதல் வேண்டும். ஏனெனின் கடித்து உயிரை யொழிக்கும் பாம்போடும் சிநேகம்செய்து பின்பு அதனைவிட்டு நீங்குதல் பெருந் துன்பத்தை உண்டாக்குவதாம்.]

தவலருந் தொல்கேள்வித் தன்மை யுடையா
ரிகலில ரெஃகுடையார் தம்முட் குழீஇ
நகலி னினிதாயிற் காண்பா மகல்வானத்
தும்ப ருறைவார் பதி. (137)

[குற்றமற்ற பழமையான நூல் கேள்விகளினது தன்மையை உடையவர்களும் பகைமைக் குணம் இல்லாதவர்களும், புத்தி கூர்மை யுடையவர்களுமாகிய பெரியோர் கூட்டத்தே கூடியிருந்து இன்புறுதலைப் பார்க்கிலும் விசாலமான விண்ணாட்டுத் தேவர்களது நகரமாகிய அமராபதி மிகுந்த இன்பத்தைக் கொடுப்பதாகுமானால் யாம் காண்போம்]

நுண்ணுணர்வி னாரொடு கூடி நுகர்வுடைமை
விண்ணுலகே யொக்கும் விழைவற்றா—நுண்ணூ
லுணர்வில ராகிய வூதிய மில்லார்ப்
புணர்த னிரயத்து ளொன்று (233)

[நுண்ணுணர்வினரொடு கூடி அவர்கள் சேர்க்கையாலுண்டாகும் இன்பத்தை அனுபவித்தல் தேவலோகத்திலிருந்து அனுபவிக்கும் இன்பத்தை யொக்கும். நுட்பமான நூலறிவில்லாதவரைச் சேர்தல் நரகதுன்பங்களுள் ஒன்றாகும்.]

மல்கு திரைய கடற் கோட் டிருப்பினும்
வல்லூற் றுவரில் கிணற்றின்கட் சென்றுண்பர் (263)

(மிகுந்த அலைகளையுடைய சமுத்திரத்தின் கரையிலே இருப்பினும் மனிதர் மிகுந்த நீர்ச்சுரப்பை யுடைய உவர்ப்பில்லாத கிணற்றிடத்தே சென்று உண்பர்]

எறிநீர்ப் பெருங்கட லெய்தி யிருந்து
மறுநீர்ச் சிறுகிணற் றூறல்பார்த் துண்பர். (275)

[மிகுந்த அலைகளை வீசுகின்ற பெருங்கட லிடத்துத் தாம் அடைந்திருந்தாலும் சுரக்கும் நீருடைய சிறுகிணற்றின் ஊற்றைத் தேடிக்கண்டு அந்நீரைப் பருகுவார்கள்.]

உள்கூர் பசியா லுழைநசைஇச் சென்றார்கட்
குள்ளூ ரிருந்துமொன் றாற்றா தா—னுள்ளூ
ரிருந்துயிர் கொன்னே கழியாது தான்போய்
விருந்தின னாதலே நன்று (286)

[மிகுந்த பசியால் தன்னிடத்தை விரும்பி வந்தடைந்தவர்களுக்கு உள்ளூரிருந்தும் ஒருதவியும் செய்ய மாட்டாத வறியவன் அவ்வூருள்ளே வசித்து வாழ்நாட்களை வீணாகக் கழிக்காமல் தான் வேற்றூருக்குப்போய் ஒருவனுக்கு அதிதியாதலே நன்று.]

இட்டாற்றுப் பட்டொன் றிரந்தவர்க் காற்றாது
முட்டாற்றுப் பட்டு முயன்றுள்ளூர் வாழ்தலி
னெட்டாற்றுச் சென்று நிரைமனையிற் கைநீட்டுங்
கெட்டாற்று வாழ்க்கையே நன்று (288)

[வறுமையிற்பட்டு யாதாயினும் ஒருபொருளை யாசித்தவர்கட்குக் கொடுக்க மாட்டாமல் சங்கடமான வழியிற் பொருந்தித தன்னைக் காத்துக்கொள்ளுதற்கு மாத்திரம் யத்தனப்பட்டு ஊரினுள்ளே வாழ்தலின் தூரமான வழியிலே போய் வரிசையாயுள்ள வீடுகள்தோறும் பிச்சைக்குக் கைநீட்டும் கெட்ட வழியில் வாழ்தலே நன்று]

புதுப்புனலும் பூங்குழையார் நட்பு மிரண்டும்
விதுப்பற நாடின் வேறல்ல—புதுப்புனலும்
மாரி யறவே யறுமே யவரன்பும்
வாரி யறவே யறும் (370)

[புதிய நீர்வெள்ளமும் அழகிய காதணியையுடைய பரத்தையர் நட்பும் நன்குஆராய்ந்து நோக்கின் வேறல்ல, புதுப்புனல் மழை நீங்கின் ஒழியும், வேசியர் நட்பும் பொருளின் வருவாய் நீங்கின் ஒழியும்]

விளக்கொளியும் வேசையர் நட்பு மிரண்டுந்
துளக்கற நாடின் வேறல்ல—விளக்கொளியு
நெய்யற்ற கண்ணே யறுமே யவரன்பும்
கையற்ற கண்ணே யறும். (371)

[விளக்கொளியும் வேசியர் நட்புமாகிய இரண்டும் அமைவுடன் ஆராய்ந்து நோக்கின் வேற்றுமையுடையனவல்ல. விளக்கொளியும் நெய்குறைந்த போழ்தே நீங்கும்; பரத்தையர் அன்பும் பொருளின் வருவாய் குறைந்த பொழுது நீங்கிவிடு.

இப்பாக்களின் சொல்நோக்கும் பொருள்நோக்கும் நடைநோக்கும் தொடர் நோக்கும் நன்கு நோக்கத் தகுந்தன.

(உதாரணங்கள் இன்னும் பலவுள, உரைக்கிற் பெருகும்).

### புறச்சான்றுகள்.

கீழ்க்கணக்குள் சேர்க்கப்பட்ட பதினெண் நூற்களுள் ஏனைப் பதினேழு நூற்களின் ஆசிரியரும் ஒவ்வொருவராக இருத்தலானும், தொகை நூற்கள் யாவும் மேற்கணக்குள் காணப்படுதலாலும், இந்நூற்கும் ஆசிரியன் ஒருவனே என்பது பெறப்படும்.

பொய்யாமொழிப் புலவரைப் பார்த்துப் பாண்டியன், "நீர் நல்ல புலவர்" என்றபோது அவர்பாடியது.

அறமுரைத் தானும் புலவன் முப்பாலின்
திறமுரைத் தானும் புலவன்—குறுமுனி
தானும் புலவன் றரணி பொறுக்குமோ
யானும் புலவ னெனில்.

இக்கவியுள் முற்படக் கூறப்பட்ட புலவன் யார்? பிற்படக் கூறப்பட்ட புலவன் யார்? இது கருதினுல், பிற்படக் கூறப்பட்ட புலவன் திருவள்ளுவன் என்பது முப்பால் என்பதனுற் பெறப்பட்டது. முற்படக் கூறப்பட்ட 'அறமுரைத்தானும் புலவன்' எனுந்தொடர் தருமத்தைக் கூறிய புலவனென்று பொதுவாகப் பொருள் படுதலின் அறநெறிச்சாரத்தின் ஆசிரியனைக் குறிக்குமெனக் கொள்ளுதல் பொருத்தமன்று. ஏனெனின்,

> " ஆலும் வேலும் பல்லுக் குறுதி
> நாலும் இரண்டும் சொல்லுக் குறுதி"

என்னும் பண்டைப் பழமொழி நாலடியையும் குறளையும் ஒன்ருகச் சேர்த்துக் கூறுதலானும் அங்ஙனம் கூறும்பொழுதும் நாலடியை முற்படக்கூறிப் பிற்படக் குறளைக் கூறுதலானும் குறளுக்கு முந்திய நூல் நாலடியென்று பலரும் கொள்ளுதலானும், இக்கவியிலும் குறள் பிற்படக் கூறப்பட்டிருத்தலானும் முற்படக் கூறப்பட்ட புலவன் நாலடியின் ஆசிரியனே என்பது பெறப்படும். நிற்க, பொய்யாமொழிப் புலவரும், அறமுரைத்தானும் புலவன் என ஒருமையில் கூறினமையின் நாலடியின் ஆசிரியன் ஒருவனே என்பது அவற்கும் உடன்பாடென்பது நன்கு புலனும்.

நம் நாட்டுப் பல உண்மைகளைக் கற்றறிந்த பெரியோர் பலரைக் கேட்டறிந்தவரும் திராவிட இலக்கணமும் ஆராய்ச்சிச் சரித்திரங்களும் எழுதியவருமாகிய கால்ட்வல் ஆசிரியர், தமது திருநெல்வேலிச் சரித்திரமென்னும் புத்தகத்துள் நாலடியின் ஆசிரியன் ஒருவன் எனக் கூறி இருப்பதும் ஈண்டு நோக்கத் தகுந்ததே.

History of Tinnevelly by R. Caldwell.

"Tradition says that there were three such colleges at Madura at different times and that it was to the last of them that Trivalluvar the celebrated author of the Kural was admited. Another of the accepted poets was the author of the Naladiar. p. 277.

T. A. கனகசபாபதி முதலியார்,
தமிழ்ப் பண்டிதர்
சென்னை, எஸ். பி. ஜி. ஹைஸ்கூல்.

# புரந்தரனுர் பெருந்தவம்

நல்லார்க டம்மை நலம்புரிந்து காத்தற்கும்
பொல்லாரைப் பொன்று நெறிபோக்கற்கும்-சொல்லாரு
முந்தை யறநாட்ட முய்த்தற்கு நான்பிறப்பன்
இந்தவுகந் தோறு மிசைந்து.

அதாவது 'நல்லாரைக் காக்கவும் தீயாரைப் போக்கவும் தருமத்தை ஊக்கவும் வேண்டி யான் யுகந்தோறும் பிறக்கின்றேன்' என்றபடி ஸ்ரீமந் நாராயண மூர்த்தியே உலகவியலை நிலை நாட்டவேண்டி இராமாவதார மெடுத்தார் என்பது அறிந்த விஷயம். இதைக் கம்பர் பெருமான் "தோன்றிய நல்லறம் நிறுத்தத் தோன்றினுன்" என்று இராமனைக் குறிக்கின்ருர்.

திருமால் இராமனுக உலகத்தில் தோன்றி மனிதர்க்கு நல்லொழுக்கம் பயிற்றி முனிவரின் இடையூறுகளையகற்ற வந்தபோதிலும், தேவர்களின் வேண்டுகோட்படியே அவர்களின் துன்பங்களைத் தவிர்க்கவே தோன்றினன். ஏனென்ருல் அரக்கரால் முனிவரும் பிறரும் அனுபவித்த துன்பத்தைவிட எத்தனையோ பங்கு அதிகமாகத் தேவர்களு மனுபவித்து வந்தார்கள் என்பதற்கு;

> ஐயிருத லையினேன் அனுச ராதியாம்
> மெய்வலி யரக்கரால் விண்ணு மண்ணுமே
> செய்தவ மிழந்தன திருவின் நாயக
> உய்திற மில்லை"

என்று தேவர்கள் ஒன்று சேர்ந்து திருமாலிடம் முறையிட்டதே சான்ருகும். ஒவ்வொரு யுகத்திலும் தேவர்களுக்கு இடையூறு வந்த பிறகுதான் பகவான் அவதாரமெடுத்ததாகப் புராணங்களும் பிறவும் கூறுகின்றன. கம்பர் இராமாவதாரத்தைக் கூறும்பொழுது 'பூமகள் மகிழ்வின் ஓங்கிடவும்,'

> " சித்தரும், இயக்கரும், தெரிவை மார்களும்
> வித்தக முனிவரும், விண்ணு ளோர்களும்
> நித்தரும் முறைமுறை நெருங்கி ஆர்ப்புறத்
> தத்துறல் ஒழிந்துநீள் தருமம் ஓங்கவே"

கோசலை இராமனைப் பெற்ருள் என்று கூறுகின்ருர். அதாவது, அனைவரும் தத்தமக்கு நன்மை யுற்றதென்று களிப்படைந்தனர் என்பதேயாகும்.

ஜனங்களுக்கு ஏற்படுந் துன்பத்தை அரசன் தவிர்ப்பது போல, தேவர்க்கு வருந் துன்பத்தைத் தேவர்கோனுன இந்திரனே தவிர்க்கக் கடமைப் பட்டவனுவான். அதனுல் இந்திரன், தேவர்களின் இன்னலை நீக்குவதற்கும், தன்னை இராவணன் துன்புறுத்தியதோடு அவன் மைந்தன் மேகநாதனும் பலதடவைப் போர் செய்து முறியடித்ததாலும், தானும் தம்மவரும் அரக்கருக்கு அடிமைத் தொழில் செய்யும்படி நியமிக்கப்பட்டதாலும் பலகால் வருந்தித்தன் நாயகனைக் குறித்துத் தேவர்களுடன் தவஞ் செய்தான். அத்தவமே பலவேறு கூறுகளாகி இராவணுதியாற் செய்யப்பட்ட துன்ப நிவர்த்திக்குக் காரணமாயிற்று என்று கம்பர் பெருமான் தமது காவியத்தில் உய்த்துணர வைக்கின்ருர். அதாவது, கம்பர் இராவண வதத்திற்குக் காரண மேற்படுகிற அயோத்தியா காண்டம் பாடத் தொடங்குவதற்கு முன் பாலகாண்டத் திறுதியில்,

> " ஆனவன் போனபின் அரசர் கோமகன்
> ஊனமில் பேரரசு உய்க்கும் நாளிடை
> வானவர் செய்த மாதவ முண்டாகலான்
> மேனனி நிகழ்ந்தன விளம்பு வாமரோ"

என்று தொகுத்துக் கூறி இடையில் (அயோத்தியா காண்டம் முதலியவைகளில்) வகுத்துக் காட்டி யுத்த காண்டத்தில் விரித்துக்கூறி நிறுத்துகின்ருர்.

ஆதலால் இராவண வதத்திற்கு இந்திரன் தேவர்களுடன் செய்த தவமானது எவ்வாறு அமைந்ததென ஆராய்வதே இங்கு எடுத்துக்கொண்ட விஷயமாகும்.

ஓர் நூலைப் பல முறையில் ஆராய்ச்சி செய்யலாம். அது ஆராய்வோர் மனப்பான்மையைப் பொறுத்ததேயாகும். ஒவ்வொரு ஆராய்ச்சிக்கும் அந்நூலிலுள்ள சிற்சில மேற்கோள்களே உதவி செய்கின்றன. அவ்வாறு இவ்வாராய்ச்சிக்கும் நோக்கும்போது இராமாயணத்தில் தேவர்கள் எவ்வெவ்விடங்களில் களிப்போடும் களிப்பின்றியும் எதிர் பார்க்கின்றனரோ அவ்விடங்களிற் சிலவே உரியன,

ஒரு காரியத்திற்கு இரண்டு காரணங்களுண்டு. அவை யாவன, முதற்காரணம் துணைக்காரணம் என்பனவாம். முதற்காரணமானது காரியத்தோடு ஒற்றுமையுடையது. துணைக்காரணமானது முதற்காரணத்தைக் காரியப்படுத்துமளவு உடனிருந்து பிறகு விலகுவது. இராமாயணத்தில் இராவண வதமாகிற காரியத்திற்கு,



இராமன் முதற்காரணமென்றும் சீதை முதலியோர் துணைக்காரணமென்றும் சொல்லலாம். இந்தத் துணைக் காரணங்கள் இராவணவதமாகிற காரியத்திற்கு எவ்வாறு துணைபுரிகின்றன என்ற காரணங்களைத் தேவருடன் புரந்தரன் செய்த பெருந்தவம் என்று தலைப்பிட்டுக் கூறலாயினேன்.

> " காரியமின்றேல் காரணமின்று
> காரணமின்றேல் காரியமின்று."

என்கிறபடி இராவணன் வதம் என்னும் காரியத்திற்குத் துணைக்காரணம் பலவற்றுள் முதலாவது சீதையேயாவள். ஏனெனில் சீதையின் காரணத்தாலே இராவணனுக்கு இறுதி நேர்ந்தது. இதைக் கம்பர் இராவணன் வாக்கில் வைத்தே கூறுகிருர். இராவணன் சூர்ப்பணகையின் வாயிலாகச் சீதையின் அழகைக் கேட்டு வரம்புகடந்த காதல் கொண்டபோது இயற்கைகளெல்லாம் அவனுக்கு மாறுபட்ட தன்மையைக் கொடுப்பனவாகவே காணப்பட்டன. அச்சந்தர்ப்பத்தில் சந்திரனை நோக்கி,

> "என்னு ருயிர்க்குக் கூற்ருய் நின்ற குலச்சனகி
> குவளை மலர்ந்த தாமரைக்குத் தோற்ருய்."

என்று கூறுகிருன். இதனுல் சீதை இன்றேல் இராவணன் சிரஞ்சீவி என்பதற்கு யாதொரு ஐயமு மில்லை. ஆதலால் சீதையின் விஷயமாகத்தான் முதலில் ஆராய வேண்டும்.

சீதை சாதாரணமான பெண்தன்மை யுடையவளல்லள். தருமத்தை நிலைநாட்ட வந்த தன் நாயகனுடன் அவளும் வரக் காரண மென்ன? தானு மக்காரியத்திற் கலந்து கொள்ளவேண்டு மென்றே. இராமன் "கருவிமா மழைக் கற்றடங் கண்டு நான் வருவல் ஈண்டு வருந்தலை" என்று சொல்லக் கேட்ட சீதையின் மனோ நிலைமையின் காரணத்தைக் கம்பர்,

> "துறந்து போமெனச் சொற்றசொல் தேறுமோ
> உறைந்த பாற்கடற் சேக்கையுடன் ஒரீஇ
> அறந்திறம்பு மென்று ஐயன் அயோத்தியில்
> பிறந்த பின்பும் பிரிவில ளாயினுள்"

என்று கூறுகிருர். இதனுல் சீதை இராமனை விட்டுப் பிரியாதவள் என்று விளங்குவதோடு, தன் நாயகன் உலக நன்மைக்கு வந்தபோதிலும், தானுமில்லாமல் அக்காரியம் நடைபெருது என்று சீதை எண்ணினள் என உய்த்துணரவும் இடமேற்படுகிறது. இது பற்றியே போலும் கம்பர்,

> சங்கங்கை யுடைமை யாலும் தாமரைக் கோயி லாலும்
> எங்கெங்கும்பாந்துவெவ்வே றுள்ளத்தில்எழுதிற்றென்ன
> அங்கங்கே தோன்றலாலும் அருந்ததியனைய கற்பின்
> நங்கையும் நம்பியொத்தாள் நாமினிப் புகல்வ தென்னே.

என்று இராமனையும் சீதையையும் ஒரு திறமாகச் சிலேடைப்படுத்திக் கூறினர். நிற்க,

தேவர்களின் இடுக்கண் தீர்த்தலாகிய இராவண சங்காரத்திற்குத் துணைக்காரணங்கள் பலவற்றின் முதலாகச் சீதையாக இருந்தபோதிலும் அவளோடு வேறு எக்காரணங்கள் சேர்ந்ததால் கோரிய காரியம் கைகூடிற்றென்று பார்ப்போம். சீதைக்கு ஏனைய அழகுள்ள பெண்மணிகளைப் போலன்றி, முதலில் மிக்க மேம்பாடான அழகே காரணமென்க. கம்பர் பெருமான் சீதையினழகைக் குறித்து,

> " அமிழ்தினைச் சுவைசெய் தென்ன
> அழகினுக்கு அழகு செய்தார்!'
> " ஆதரித்து அமுதில் கோல் தோய்த்து
> அவையவம் அமைக்கும் தன்மை
> யாதெனத் திகைக்கு மல்லால்
> மதனற்கும் எழுதவொண்ணுச் சீதை"

என்ற தொடக்கத்தன தன் கூற்றில் வைத்தும், பிறகு சூர்ப்பணகை வாக்கில் வைத்து,

> "இவ்வுலகத்தாள் அங்கம் யாவர்க்கும் எழுதொணுதாள்"
> " ஆசையால் அழிந்து தேய்ந்தான் அனங்கன்"
> " கருதி மற்றினி வேறில்லை கமலத்துக் கடவுள்தானே
> ஒருதிறத்து உணரநோக்கி உருவினுக்கு உலகமூன்றி[ன்]
> இருதிறத்தார்க்கும் செய்த வரம்பு இவ்விருவர்"

என்பன பிறவும் கூறுகிருர். இவ்வா றழகுவாய்ந்த சீதை பர்ணசாலையிலிருந்து வெளியே வரவில்லையானுல் மேல் வரு நிகழ்ச்சிகள் என்றும் ஏற்படாதாகையால் இச்சந்தர்ப்பத்தில் கம்பர் தமது கொள்கையான தேவர்கள் தவத்தைப் பிணைக்கவேண்டு மென்றெண்ணி;

> "பெண்ணிடையரசிதேவர் பெற்றநல்வரத்தாற் பின்னர்
> மண்ணிடைமணியின்வந்தவஞ்சியேபோல்வாள்வந்தாள்"

என்று அழகுபெறப் பொருத்திக் கூறுகிருர். ஆதலால் இங்கு எடுத்துக்காட்டிய மேற்கோள்களால் இந்திரன் தவத்தில் ஓர் பகுதி சீதாதேவியின் ஒப்புவமையற்ற அழகாகவும் அமைந்தது.

சீதா தேவிக்கு இத்துணை அழகோடு நிலைமையான கற்பும் சேர்ந்து மேல்வரும் நிகழ்ச்சிகளுக்குக் காரணமாயிற் றென்னலாம்.

> பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
> திண்மை யுண்டாகப் பெறின்

என்பது நீதியானதினுலே அதற்கிலக்காகிய சீதாதேவியின் கற்பு எவ்வாறு கூறப்பட்டிருக்கிற தென்பதைப் பார்ப்போம். சுருக்கமாகக் கூறுமிடத்து இயற்கையில் வெப்பத்தையே தன் குணமாகக் கொண்டதும், அனைத்தையும் எரிக்கும் தன்மையுடையதுமான தீயை அவ்விரு தன்மைகளிலிருந்தும் விலக்கியது இவ்வன்னையின் கற்பெனும் திறல் வெஞ்செந்தீ. அன்றித் தன் பரிவுதீர்த்த அனுமனை நோக்கி;

> " வாழிய வள்ளலேயான் மறுவிலா மனத்தேனென்னில்
> ஊழியோர் பகலா யோதும் யாண்டெலாம் உலக மேழும்
> ஏழும் வீவுற்றஞான்றும், இன்றென இருத்தி"

என்று சிரஞ்சீவியாக வாழ்த்திய வாழ்த்தும், தன் பொருட்டாக வந்த அனுமானது வாலில் தீக்கொளுத்தினுர்கள் என்று கேட்டதும் அக்கினியைக் குறித்து,

> " நீயே யுலகுக்கு ஒருசான்று;
> நிற்கே தெரியும் கற்பு; அதனில்
> தூயே னென்னில் தொழுகின்றேன்
> எரியே அவனைச் சுடல்"

என்று மனச்சாக்ஷியாகச் சொன்னதும் சீதாதேவியின் கற்பை விளக்கிக் காட்டாநிற்கும். இவ்வாறு மனச்சான்ருகக் கற்புத் தீயுடைய சீதை கூறியபோது,

> " ஒளித்த வெங்கனலவன் உள்ளம் உட்கினுன்"

என்று கூறுகிருர். அக்கினிதேவனும் மனங்குன்றுதலடைந்தபோது;

> கற்றையங் கனலி மற்றைக் காயத்தி முனிவர் காக்கும்
> முற்றுறு மும்மைச்செந்தீ முப்புர முருங்கச் சுட்ட[தே]
> கொற்றவன் நெற்றிக்கண்ணின் வன்னியும் குளிர்ந்தவன்
> "அண்டமும்கடந்தானங்கை அனலியும்குளிர்ந்தது; அங்கி
> குண்டமும்குளிர்ந்தமேகத்து உருமெலாகுளிர்ந்தகொற்ற
> சண்டவெங் கதிரவாகித் தழங்கிருள் விழுங்குந்தாவில்[ச்]
> மண்டலங் குளிர்ந்த மீளா நரகமும் குளிர்ந்த மாதோ"

என்று எல்லாத் தீகளும் தத்தம் இயற்கையான சூடு குன்றப்பெற்றன என்று கூறுகின்றனர். அனுமான் தன்

வாலிற் கொளுத்தப்பட்ட தீ சுடாதது கண்டு சிந்தித்து, "சனகன்பாவைக் கற்பினலியன்றது" என்றும் எண்ணினன். தவிர, இராமன் ஏவலால் சீதை அக்கினிப் பிரவேசஞ் செய்தபோது அங்கியங் கடவுள் பிராட்டியாரை ஏந்திவந்து இராமன் முன்னிலையிற் கொண்டுவைத்து;

"அங்கியான் என்னை இவ்வன்னை கற்பெனும்
பொங்கு வெந்தீச்சுடப் பொறுக்கிலாமையால்
இங்கணைந்தேன்."

என்று கூறிச் சீதையின் மறுவிலாத் தன்மையையும் உரைத்துச் சென்றதுமன்றிப் பிரமன் முதலிய தேவர்களும் வந்து சீதையின் கற்பின் திறத்தை விளக்கி எடுத்துக் கூறினர். தவிர, அனுமான் இலங்கைக்குச் சென்று திரும்பி இராமனிடம் வந்து;

விற்பெருந் தடந்தோள் வீரவீங்குநீர் இலங்கை வெற்பில்
நற்பெருந் தவத்த ளாய நங்கையைக் கண்டேனல்லேன்
இற்பிறப்பென்ப தொன்றும் இரும்பொறை யென்ப [தொன்றும்
கற்பெனும் பெயரதொன்றும் களிநடம் புரியக் கண்டேன்"

என்று கூறி வலியுறுத்துகிறான். இன்னும் விபீஷணன் முதலியோரும் ஆங்காங்குச் சீதையின் கற்பைக் குறித்துச் சொல்வதையும் பார்க்கும்போது தேவருடன் இந்திரன்செய்த தவத்தில் ஒரு கூறு சானகியாரின் திண்மையான கற்பாகவு மமைந்திருத்தல் சாலும்.

இங்ஙனங் கற்புவாய்ந்த சீதையிடம் இராவணன் காதல் கொள்ளவில்லை யானல் எடுத்துக்கொண்ட காரியம் இனிது நிறைவேறு தென்பது திண்ணம். ஆதலால் இராவணன் காதல் இவ்விஷயத்திற்கு நடுநாயகமான ஓர் முக்கிய காரணமாகும். ஆசைக்கும் ஓர் அளவு வேண்டும். மேன்மேலும் ஆசை வளர இடங்கொடுத்துச் சென்றேமானல் இறுதியில் அது கெடுதிக்கிடமாய் மரணத்திற்கும் காரணமாகும். இதுபற்றியே ஆன்றோரும் "நிறையுமுண்டோ காமம் காழ்கொளின்" என்றும் "அளவிறந்த காமம் சிறுமை" என்றும் கூறினர். இராவணனுடைய காதல் ஏனையோர்க்குள்ளதுபோலன்றி அளவுகடந்து விட்டதினலே துன்பத்திற்குக் கால்கொண்டது. இது குறிப்பாகத் தோன்றத் திட்பநுட்பமாக ஒவ்வொரு விஷயத்தையும் குறைந்த கவித்தொகையில் செவ்வனே விளங்க அடக்கிப் படிப்போருக்கு அவ்விஷயம் மேன்மேலும் வரவேண்டுமென்ற எண்ணம் நிகழும்படி கவிபாடவல்லவரான கம்பர்பெருமான் இராவணன் காதலைக் கூறுமிடத்துச் சுமார் நூறு பெரும்போக்கான சந்தங்களுடைய கவிகளாற் கூறுகின்றார். இயற்கையில் ஆடவரைவிடப் பெண்கள்தான் ஆசைமிக்குடையவராவர். அவ்வாறு பார்க்கும்போது சூர்ப்பணகையின் காதலைத்தான் விரித்துக் கூறவேண்டும். அங்ஙனம் கம்பர் கூறாததற்குக் காரணம் யாதெனில் சூர்ப்பணகையின் காதலால் அவளுக்குத் தன் அங்கங்கள் பங்கப்பட்டனவேயன்றி வேறில்லை. இராவணனே காதலால் தன் வாழ்நாளுக்கு இறுதிபெற்றான் என்பதேயாம்.

சூர்ப்பணகை இராவணனிடம் வந்து சீதையின் தன்மையைக் குறித்துத் "தாமரை யிருந்ததையல் சேடியாம் தரமுமல்லள்" என்னும் தொடக்கத்தன கூறி,

"வள்ளலே யுனக்குநல்லேன் மற்றுநின் மனையில்வாழும்
கிள்ளைபோல் மொழியார்க்கெல்லாம்கேடுசூழ் கின்றே [னன்றே"

என்று புகழ்ந்து சொல்லிக், கூறியகாரியம் செய்யின் கெடுதியென்பது குறிப்பாகத் தொனிக்கும்படியும் கூறினதாகக் கம்பர் கூறுகின்றார். இவ்வாறு சீதையின் உயர்வையும் மேல் நிகழ்ச்சியையும் விரித்துக் கூறக் கேட்ட இராவணனுக்குத் 'தாபமும் காமநோயும் உயிரோடு கலந்தன' என்றும் கூறுகின்றார். ஆசை உயிரோடு கலக்கப்பெற்ற இராவணன் நிலைமையை,

கானையு மறந்தான் தங்கை மூக்கினைக் கடிந்து நின்றான்
ஊரையு மறந்தான் உற்ற பழியையு மறந்தான் வெற்றி
அரனையுங் கொண்ட காமன் அம்பினல் முன்னைப்பெற்ற
வரனையு மறந்தான் கேட்ட மங்கையை மறக்கி லாதான்

என்றுகூறச் சீதை என்னும் நாமமும் இராவணன் மனமும் ஒன்றயிருந்தால் ஒன்றை யொழித்து ஒன்றை நினைக்க வேறு வழியுண்டோ? ஆதலால்;

மயிலுடைச் சாயலாளை வஞ்சியா முன்னம் நீண்ட
எயிலுடைஇலங்கைநாதன் னிதயமாஞ் சிறையில் [வைத்தான்

அதனல் இராவணனுடைய மனமும் வெயிற் காலத்திலுற்ற வெண்ணெய்போல வெதும்பிற்று, என்று கூறி,

"விதியது வலியினலும் மேலுள விளைவினலும்;
பதியுறை கேடுவந்து குறுகிய பயத்தினலும்;
கதியுறை பொறியின் வெய்ய காமநோய் கல்விநோக்கா
மதியிலி மறையச்செய்த தீமைபோல் வளர்ந்ததன்றே"

என்று கூறுகிறார். இன்பத்திற்குரிய காமத்தை இராவணனுக்கு மட்டிலும் கம்பர் நோயாகவே கூறினர். இராவணனுடைய காதலைக் கூறும் ஒவ்வொரு செய்யுளிலும் பெரும்பாலும் இராவணனுக்கு இறுதிபயக்கும் பொருளையே கற்பித்துக் கூறுகின்றார் கம்பர். ஆங்கு நோக்குவார்க்குத் தெள்ளிதில் விளங்கு மாதலாலும் ஈண்டுரைக்கிற் பெருகு மாதலாலும் அவ்விஷயம் இங்கு விடப்பட்டது.

நோய் அதிகரித்து வளர்ந்து வந்ததானல் மரணம் ஏற்படுதல்போல, இராவணனுக்குக் காமநோ யதிகரித்து வர அதனல் அவன் வாழ்நாள் முடிவுபெற்றான் என்பதறியக் கிடக்கின்றது. இங்ஙனங் காதல்கொண்ட இராவணன் சபையிலிருந்து எழுந்து போகின்றபொழுது தேவர்கள் மலர்மழை பொழிந்ததாகவும் கம்பர் கூறுகின்றார். தேவர் பூமாரிபொழியக் காரணம் தாம் செய்த தவம் நிலைபெற்றுப் பலித்ததென்றே யாகும். ஆதலால் மேற்கூறிய தவத்தில் ஒரு கூறு இராவணன் காதலாகவும் பொருந்திற்றென்க.

இராவணனுக்கு இவ்வாறு சாதலுக்கு உரிய அளவிறந்த காதல் ஏற்படக் காரணம் சூர்ப்பணகை சீதையைக் குறித்துச் சொன்ன சொற்களேயாகும். சூர்ப்பணகைக்கும் தான் இராமனிடம் வேண்டிய காரியம் நிகழ்ந்திருக்குமானல் இவ்வாறு இராவணன் காதல் கொள்ளக் காரணம் ஏற்பட்டிராதென்பது திண்ணம். சூர்ப்பணகைதான் கேட்டபோதிலும் இலக்குமணன் அவளை அங்கங் குறைத்துப் பங்கப்படுத்தவில்லையானல் சூர்ப்பணகையும் இராவணனிடம் போய்ச் சொல்லியிருக்கவே மாட்டாள். இலக்குமணன் சூர்ப்பணகையைப் பங்கப்படுத்தியபோது அவள் போட்ட சத்தம் "திக்கனைத்தினும் சென்றது, தேவர்தம் செவியும் புக்கதுற்றது" என்று கூறியதுமன்றி, அனைவரும் அறியும்படி உம்மை கொடுத்துங் கூறியிருக்கின்றனர். தவிர சூர்ப்பணகையை ஒறுத்த நிகழ்ச்சியானது இராவண சங்காரத்திற்கு நாட்செய்த அறிகுறியாகுமென்று வாசிப்போரறியும்படி

கொலைதுமித்துயர் கொடுங்கதிர் வாளின் அக்கொடியாள்
மூலைதுமித்து உயர் மூக்கினைநீக்கிய முறைமை
மலைதுமித்தென இராவணன் மணியுடை மகுடத்
தலைதுமித்தற்கு நாட்கொண்டதொத்ததோர் தன்மை

என்று கம்பர் விளக்கிக் கூறுகிறார். சூர்ப்பணகை இலங்கைக்குச் சென்று தன் முன்னேனிடம் சொல்ல



அவனடித் தலத்தில் வீழ்தலும் அப்பொழுதுள்ள உலக நிகழ்ச்சியைக் கூறுங்கால் ஒவ்வொரு பாடலின் இறுதியிலும்;

"ஓடின திசைக்கரிகள், உம்பரும் ஒளித்தார்"
"திரிந்த புவனங்கள் வினை தேவரும் அயிர்த்தார்"
"ஒன்றும் உரையாடலிலர் உம்பரோடு இம்பர்" என்று

இவ்வாறு அப்பொழுதைய தேவர்களின் தன்மையையுங் கூறுகிறார். இதனல் தேவர்களும் தாம் தம் தலைவனேடு செய்த தவம் பயனடைந்ததை எண்ணி இராவணன் நமக்கு ஏதேனும் தீங்கு செய்வானே என்று அஞ்சியே அடங்கினர். ஆதலால் இந்திரன் தவம் இக்கூற்றிலும் ஓர்பகுதி அமைந்திருத்தல் வேண்டும்.

மேற்கூறிய நிகழ்ச்சிகளுக்கெல்லாம் முக்கியகாரணம் இராமன் வனத்திற்கு வந்ததேயாகும். இராமன் வனத்திற்கு வரவில்லையானல் இங்குக்கூறிய காரியங்களில் ஒன்றுகூட நடைபெற்றிராது. இராமன் வனத்திற்கு வர மந்தரையின் சூழ்ச்சியால் இராமனிடம் மிக்க பற்றுதலுடைய கைகேயியின் மனம் வேறுபட்டதே முக்கிய காரணமாகும். மந்தரையின் சூழ்ச்சியால் கைகேயியின் மனம் திரிதலைக் கூறுங்கால் கம்பநாடர்;

"தீய மந்தரை யிவ்வுரை செப்பலும் தேவி
தூய சிந்தையும் திரிந்தது; சூழ்ச்சியின் இமையோர்
மாயையும்; அவர்பெற்ற நல்வரம் உண்மையானும்,
ஆய அந்தணர் இயற்றிய அருந்தவத் தானும்
அரக்கர் பாவமும் அல்லவர் இயற்றிய அறமும்
தூக்க நல்லருள் துறந்தனள் தூய்மொழி மடமான்"

என்று கூறுகின்றார். இங்ஙனம் மனந்திரிந்த கைகேயி சொற்படி இராமன் காட்டிற்குச் செல்கிறபோது கண்டோர் மனப்பான்மையைக் கூறுமிடத்து,

"அந்தணர் அருந்தவர் அவனிகாவலர்
நந்தலில் நகருளார் நாட்டுளார்கள் தம்
சிந்தை என்புகல்வது; தேவர் உள்ளமும்
வெந்தனர் மேல்வரும் உறுதிவேண்டலர்"

என்றும் கூறுகின்றார். அதாவது, அந்தணர் முதலிய நாட்டினர் நிலைமையை என்னென்றுரைப்பது. இராவணவதத்தை விருப்புடன் எதிர்பார்த்திருக்கும் தேவரும் மனம்நொந்து அக்காரியத்தை விரும்பவில்லை என்பதாகும்.

கம்ப நாட்டாழ்வார் தாம் கற்பித்த முறையை அனைவரும் தெளிவாக அறியவும், இறுதியாகத் தொகை கட்டுவதற்கும் தகுதியுடையவர் யாவரென்று பார்த்து, மண்டோதரிதான் உரியவ ளென்றெண்ணி, அவள் வாக்கில்வைத்துக் கூறுகிறார். மண்டோதரி தன்நாயகன் (இராவணன்) இறந்து கிடத்தலை வந்துபார்த்துப் புலம்புகிறபோது அடியில் வருமாறு கூறுகிறாள். அதாவது,

காந்தையருக்கு அணியனைய சானகியார்
பேரழகும்; அவர்தம் கற்பும்;
ஏந்துபுயத்து இராவணஞர் காதலும்;
அச்சூர்ப்பணகை இழந்த மூக்கும்;
வேந்தர்பிரான் தயாதனர் பணியினல்
வெங்கானில் விரதம் பூண்டு
போந்ததுவும் கடைமுறையே
புரந்தரனர் பெருந்தவமாய்ப் போயிற் றம்மா

என்பதேயாகும். பெண்களுக்கு அருமையான ஆபரணம் போன்ற சானகியாரின் மிகுந்த அழகும் அவளது கற்பும், இராவணனர் காதலும், சூர்ப்பணகை இழந்த மூக்கும்; தன் தந்தையின் கட்டளை என்று இராமன் காட்டிற்குப் போந்ததும், இறுதியில் இந்திரன் செய்த தவமாகவே போய்விட்டன.

இப்பாடலுக்கு "ஒருமையிற் பன்மையும் பன்மையுள் ஒருமையும்" "உவப்பினும் உயர்வினும்" என்ற சூத்திரங்களின்படி வழுவமைதி கொடுத்துப் பொருள் நோக்க வேண்டும்.

இதுகாறும் கூறப்பட்டவைகளால் இந்திரன் தேவர்களோடு செய்த தவமானது ஐந்து கூறுகப்பிரிந்து சீதையின் அழகாகவும், அவளது கற்பாகவும், இராமனது வனப் போக்காகவும், சூர்ப்பணகையின் மூக்காகவும், இராவணனுடைய் காதலாகவும் வந்தமைந்து இராவண வதமாகிற காரியத்தை முடித்ததென்று கம்பநாடர் அமைத்திருக்கிறார். இவ்வாறு முறையாகக் கூறமல் முறை பிறழ்ந்து கூறக் காரணம் மண்டோதரி கூறும் முறைவைப்பைக் கருதியேயாகும்.

R. முத்தையர்,
தலைமைத் தமிழ்ப் பண்டிதர்,
ஸ்ரீ மந்திரமூர்த்தி ஹைஸ்கூல், திருநெல்வேலி

[காரண காரிய வரிசைப்படி முதலிலிருந்து சொல்ல வேண்டுமானல், இராமன் வனம் செல்லச் சூர்ப்பணகை மூக்கிழக்கவே சீதையினழகைக் கேட்க நேர்ந்த இராவணன் காதல் கொண்டும் அது அவள் கற்பினல் கைகூடாது போய் இந்திரன் செய்த தவம் நிறைவு எய்தியது என்றமைப்பதே முறையென எமக்குத் தோன்றுகிறது. ஆனல் மண்டோதரி நினைத்த தொடர்ச்சிதான் அப்போது அவளது மனம் இருந்த நிலைக்கு ஏற்றதாகும். சீதையின் பேரழகு ஒருபுறம் தூண்டிய காதல் இராவணனுக்குக் கைகூடா வண்ணம் மறுபுறம் அவளது கற்பே தடுக்க நேர்ந்திராவிடில் மண்டோதரி இந்நாள் தன் நாயகனை இழந்திருக்க மாட்டாள் என்னும் எண்ணம் முதல் நின்று சீதையின் அழகையும் கற்பையும் ஒன்றாய்ச் சேர்த்து முன் கூறினள். கற்புடைய ஒருத்திமாட்டு இராவணன் காதல் கொண்டதைப் பின் நொந்தனள். பிறகு அக்காதலுக்கு ஆதாரமாயிருந்த அழகை இராவணனுக்குத் தெரிவிக்கச் சூர்பணகை இழந்த மூக்குக் காரணமாயிற்றென்று அதனை அடுத்துப் பழித்தனள். அம்மூக்கை அறுக்க வேனே இராமன் வனம் போயினன், என்னும் எண்ணம் தொடர்வது இயற்கையே. அங்கு அவன் வனம் சென்றதும் இங்கு இவள் இராவணனை இழப்பதும் நேர்ந்ததென்றால் இவ்விரண்டையும் பிணைத்து வைக்க ஒன்று இருத்தல் வேண்டுமே, அது புரந்தரனர் பெருந்தவந்தான் ஆதல் வேண்டும், என முடித்தாள். ஆசிரியன்.]

லோகோபகாரி

உள்நாடு ரூ. 4. வாரப்பத்திரிகை, சென்னை. வெளிநாடு ரூ. 6.

# தமிழ்ப் பாடம் 7.

## நளவெண்பா

(108-வது பக்கத் தொடர்ச்சி)

### சுயம்வர காண்டம்.

எழுவடுதோண் மன்னு விலங்கிழையோர் தூண்டக்
கொழுநுதியிற் சாய்ந்த குவளை—உழுநர்
மடைமிதிப்பத் தேன்பாயு மாடொலிநீர் நாடன்
கொடைவிதர்ப்பன் பெற்றதோர் கொம்பு. 20

**பதப்பிரிவு:**—எழு அடு தோள் மன்னு, இலங்கு இழை ஏர் தூண்ட கொழுநுதியில் சாய்ந்த குவளை உழுநர் மடை மிதிப்ப தேன் பாயும் மாடு ஒலி நீர் நாடன் கொடை விதர்ப்பன் பெற்றது ஓர் கொம்பு. (இதுவே அன்வயமும்.)

**கருத்து:**—'நான் சொன்ன தமயந்தி, வளம் மிகுந்த விதர்ப்பநாட்டு அரசனது மகள்' என்று அன்னம் நளனுக்கு மறுமொழி கூறியது. இந்தச் செய்யுள் முதல் 24-வது செய்யுள் வரையிலும், தமயந்தியின் குலம் குணம் அழகு முதலியவைகளை அன்னம் நளனுக்குப் புகழ்ந்துரைத்த சொற்கள்.

**பதவுரை.**

எழு - தூணை
அடு - தாக்குகின்ற
தோள் - தோள்களையுடைய
மன்னு - நளமகாராஜனே,
இலங்கு இழை - பிரகாசம்பொருந்திய ஆபரணங்களையணிந்த மருதநிலப் பெண்கள்
ஏர் - (உழுகின்ற) ஏரை
தூண்ட - செலுத்த (அதனால்)
கொழு - கொழுவினது
நுதியில் - நுனியிலே
சாய்ந்த - சாய்ந்த
குவளை - குவளைமலர்களை,
உழுநர் - உழவர்கள்
மடை மிதிப்ப - மடை மிதிப்பதால்
தேன் - (அப்படிச் சாய்ந்த குவளை மலர்களினின்று வழிந்த) தேன்
பாயும் - பாய்கின்ற
மாடு - செல்வம்
ஒலி - ஒலிக்கின்ற (விளங்குகின்ற)
நீர் - நீர்வளமுடைய
நாடன் - நாட்டையுடையவனுகிய
கொடை - ஈகையிற் சிறந்த
விதர்ப்பன் - விதர்ப்பனுகிய வீமராஜன்
பெற்றது - பெற்றதான
ஓர் - ஒரு
கொம்பு - பூங்கிளை போல்வாள் (அத்தமயந்தி ஆவள்)

**விளக்கம்:**—(இச்செய்யுள் முழுவதும் அன்னத்தினுடையவாக்கு) அன்னம் நளனை என்னவென்று கூப்பிட்டது? மன்னு-அரசனே. எதை உடைய அரசனே? தோள்மன்னு - தோள்களை உடைய அரசனே. என்ன செய்கின்ற தோள்? அடுதோள் - (போர் செய்கின்ற) தகர்க்கின்ற தோள். எதை அடுகின்ற தோள்? எழு - தூண்களை. தூண்களைத் தகர்க்கவல்ல தோள்களை உடைய வேந்தனே, என்று அன்னம் நளனைக் கூப்பிட்டு என்ன சொல்லியது? ஓர்கொம்பு - (நீ கேட்டவள்) ஒரு பூங்கொம்புபோன்ற பெண், என்றது. என்ன கொம்பு? பெற்றது ஓர் கொம்பு - பெற்றதான ஒரு பூங்கிளை. யார் பெற்ற கொம்பு? விதர்ப்பன் பெற்றது. அவ்விதர்ப்பன் எப்படிப்பட்டவன்? கொடைவிதர்ப்பன் - ஈகைக்குணத்திற் சிறந்த விதர்ப்பன். கொம்புபோன்ற தமயந்தியைப் பெற்ற கொடை விதர்ப்பன் யார்? நாடன் - நாட்டை உடையவன். எப்படிப்பட்ட நாடன்? நீர் நாடன் - நீர் வளமுடைய நாட்டை உடையவன். எத்தகைய நீர் நாடன்? ஒலி நீர் நாடன் - ஒலிக்கின்ற நீர்நாட்டை உடையவன். எது ஒலிக்கின்ற நீர்நாடன்? மாடு ஒலி நீர்நாடன் - (மாடு - செல்வம்) செல்வம் ஒலிக்கின்ற நீர்நாடன். எந்தச் செல்வம் ஒலிக்கின்ற நீர்நாடன்? பாயும் மாடு - பாய்கின்ற செல்வம். எது பாய்கின்ற செல்வம்? தேன் பாயும் மாடு - தேன் பாய்கின்ற செல்வம். எதனுல் தேன் பாய்கின்றது? மடைமிதிப்பத் தேன் பாயும் மாடு - மடை மிதிப்பதனுல் தேன் பாய்கின்ற செல்வம், யார் மடைமிதிப்பது? உழுநர்-உழவர். உழுநர் மடைமிதிக்கும்போது எதனிலிருந்து தேன் பாய்கின்றது? குவளை - குவளைமலர்களிலிருந்து. எந்தக்குவளை? சாய்ந்த குவளை. எதனுல் சாய்ந்த குவளை? நுதியின் - நுனியினுல். எதன் நுனியால்? கொழுநுதியின் - கொழுவினது நுனியினுல். குவளைமலர்கள் சாயும்படி கொழுநுனி பாய்வதற்கு எதனுல் நேர்ந்தது? தூண்ட - செலுத்தினதினுல். எதைத் தூண்டினதால்? ஏர்தூண்ட-ஏரைச் செலுத்தினதால். யார் ஏர்தூண்ட? இலங்கு இழை ஏர்தூண்ட-(இலங்கு - பிரகாசிக்கின்ற, இழை - ஆபரணம். இங்குப் பிரகாசிக்கின்ற ஆபரணங்களை யணிந்த மருதநில மாதர்) மாதர் ஏர் செலுத்தியதால்.

"உழத்தியர் செலுத்திய ஏரினுல் வயல்களில் சாய்ந்த குவளைகளிலிருந்து, உழவர் மடைமிதித்ததால், பாய்ந்த தேனின் செல்வம் விளங்கும் நீர்வளமிகுந்த விதர்ப்பநாட்டு அரசன் பெற்ற பூங்கொம்பு போன்றவள், அத்தமயந்தி" என்று அன்னம் நளனுக்குச் சொல்லியது.

**விரிவுரை:**—மாடு என்னும் பதத்திற்கு இருக்கின்ற பல அர்த்தங்களில், செல்வம், என்பது ஒன்று. செல்வம் நாட்டில் தங்கியிருந்த தென்பதற்குச் 'செல்வம் தூங்கியது' என்றும், நாட்டில் விளங்கியது என்பதற்குச் "செல்வம் ஒலித்தது" என்றும் கூறுவது கவிகளின் வழக்கம். செல்வத்திற்குத் தூக்கமும் ஒலியும் இல்லையெனினும் இவ்வாறு கூறுவது வழுவாகாது. "துஞ்சும் நீள் நிதியது சுரமை" என்றும், "நால்நிலம் கலந்து பொன்நரலும் நாடு" என்றும் சூளாமணியில் வந்திருக்கின்றன. (துஞ்சுதல் - தூங்குதல்; நரலல் - ஒலித்தல். நிதி - பொன், செல்வம்). ஆகையால் இச்செய்யுளில், மாடு ஒலி நீர் நாடன் என்பதற்குச் செல்வம் விளங்குகின்ற நீர்வளம் மிகுந்த நாடுடையவன், என்னும் பொருள் பொருந்தும். குவளையிலிருந்து தேன்பாய்ந்து ஓடுவது அந்நீர்வளத்திற்கு அடையாளம்.

**குறிப்பு:**—1. கொம்பு என்பது பூங்கிளை. மெல்லிய தன்மையாலும் பார்ப்பவர் மனதைக் கவர்கின்ற அழகினுலும் பூங்கொம்பு மாதர்களுக்கு உவமை. அந்த உவமைப்பொருளே பெண் என்னும் பொருளில் வந்திருப்பதால் இங்கு அது உவமை ஆகுபெயர்.



2. இலங்கிழை ஏர்தூண்ட, என்னும் வாக்கியத்தை இருக்கின்ற பிரகாரமே பார்த்தால், 'பிரகாசம் பொருந்திய ஆபரணம் ஏர் செலுத்த' என்னும் அர்த்தம் வருகின்றது. ஆபரணம் ஏர் செலுத்தாது. ஆதலால் ஆபரணத்தை அணிந்த மகளிர் என்று கொள்ளவேண்டும். இதற்கு அன்மொழித் தொகை என்று இலக்கணத்தில் பெயர். அதை வேறு சமயம் விரித்துரைப்போம்.

நாற்குணமு நாற்படையா வைம்புலனு நல்லமைச்சா
வார்க்குஞ் சிலம்பே யணிமுரசா—வேற்படையும்
வாளுமே கண்ணு வதன மதிக்குடைக்கீ
ழாளுமே பெண்மை யரசு. 21.

**பதப்பிரிவு:**—நால் குணமும் நால் படையா ஐம்புலனும் நல் அமைச்சா ஆர்க்கும் சிலம்பே அணி முரசா வேல்படையும் வாளுமே கண்ணு வதனம் மதி குடை கீழ் ஆளுமே பெண்மை அரசு.

**கருத்து:**—அந்தத் தமயந்தி மாதர்க்குரிய சிறந்த குணங்கள் வாய்ந்து மெய்யறிவு உடையவளாய் மிகுந்த அழகோடு கூடி வாழ்கின்றவொரு பெண்ணுவாள்.

**பதவுரை.**

நால் - நான்கு
குணமும் - குணங்களும்
நால் - நான்கு
படையா - சைனியங்களாகவும்,
ஐ - ஐந்து
புலனும் - இந்திரியங்களும்
நல் - நல்ல
அமைச்சா - மந்திரிகளாகவும்
ஆர்க்கும் - ஒலிக்கின்ற
சிலம்பே - (காலிலணியும் ஆபரணங்களாகிய) சிலம்புகளே
அணி - சைனியத்திற்கு உரிய
முரசா - பேரிகையாகவும்,
வேல்படையும் - வேலாயுதமும்
வாளும் - வாளும்
கண்ணு - கண்களாகவும்,
வதனம் - முகமாகிய
மதி - சந்திரன்போன்ற
குடைக்கீழ் - குடையின் நிழலில்,
பெண்மை - (தனது) பெண்தன்மை என்னும்
அரசு - இராஜ்யத்தை
ஆளும் - (தமயந்தி) ஆள்கின்றுள்.

**விளக்கம்:**—ஆளும் - ஆள்கின்றுள் (பயனிலை). யார் ஆளும்? தமயந்தி. தோன்றுயெழுவாய்; அதாவது, எழுவாய் இச்செய்யுளில் இல்லை. சந்தர்ப்பத்தை நோக்கித் 'தமயந்தி' என்னும் எழுவாயை வருவித்துக் கொள்ளவேண்டும். தமயந்தி எதை ஆளும்? அரசு - இராஜ்யத்தை. எந்த அரசைத் தமயந்தி ஆளும்? பெண்மை அரசு ஆளும்-பெண்தன்மை (maidenhood) என்னும் அரசை ஆள்கின்றுள். [இராஜ்யம் என்பது பெண்மை; அதை ஆள்பவள் தமயந்தி. ஆனுல் அரசிற்கு வேண்டிய அங்கங்கள் இந்த ஆட்சியில் இருந்தனவோ எனின், ஆம் இருந்தன. அவைதாம் சைனியம் மந்திரி முரசு வேலாயுதம் வாளாயுதம் வெண்கொற்றக் குடை, போன்றன.] ஆயின் அவளுக்கு அமைந்த நால் வகைச் சேனைகள் எவை? நால்குணமும் நால்படையாக - அச்சம் நாணம் மடமை பயிர்ப்பு, என்னும் பெண்களுக்கு உரிய நான்கு குணங்களும் அவளுக்கு இரதம் கஜம் துரகம் பதாதி என்னும் சதுரங்கசேனை ஆகவும் ஆளுவாள். அவளது அமைச்சர் யார்? ஐம்புலனும் நல் அமைச்சு ஆக - மெய் வாய் கண் மூக்கு செவி என்னும் ஐந்து புலன்களும் பொய் வழிச் செல்லாமல் விஷயம் இருக்கின்ற விதத்தை அவளுக்கு உண்மையாய் எடுத்துக் காட்டுகின்ற தன்மையால் நல்ல மந்திரிகளாகவும். முரசு எது? ஆர்க்கும் சிலம்பே அணி முரசாக - ஒலிக்கின்ற சிலம்புகளே படையுள் அடிக்கின்ற முரசவாத்தியங்கள் போலச் சப்தம் செய்யவும். வேலாயுதமும் வாளாயுதமும் எவை? வேல் படையும் வாளும் கண்ணுக - கூரிய பார்வையால் வேல் போன்றும், ஒளியொடு வடிவத்தால் வாள்போன்றும் இருக்கின்ற அவளது கண்களே அவ்விரு படைகளாகவும். இந்த அங்கங்களோடு பெண்மை என்னும் அரசை அவள் எந்தக் குடையின்கீழ் ஆண்டனள்? வதனம் மதிக் குடைக்கீழ் ஆளும் - வடிவத்திலும் பிரகாசத்திலும் குளிர்ந்த தன்மையிலும் அரசாது குடைபோன்றிருப்பது சந்திரன்; அதே தன்மைகளால் சந்திரனும் அவள் முகத்தை ஒக்கும். ஆதலால் தனது முகமாகிய குடையின்கீழ் அவள் அரசு செலுத்தினுள்.

**விரிவுரை:**— தமயந்தியின் குணநலங்களை அன்னம் உருவக அணியினுல் சிறப்பித்துக் கூறுகின்றது. எந்த விஷயத்தைப் பற்றிச் சொல்லப்படுகின்றதோ அதற்கும் அதற்கு உவமையாய பொருளுக்கும் வேறுபாடு உண்டு என்னும் நினைவே சம்மனதில் உண்டாகாதபடிக் கூறுவது உருவக அணி. (70 வது பக்கம்.) உருவக அணியைக் கவிகள் பலவிதமாய்க் கையாள்கின்றனர். இந்தச் செய்யுளில் பெண்மை அரசு, (பெண்மையாகிய இராஜ்யம்) என்பதனுல் தமயந்தியினது பெண்மையாகிய தன்மையை ஒரு இராஜ்யமென்று உருவகப்படுத்தி யிருக்கின்றுர். ஆனுல் அதனேடு விடாமல் அரசாட்சிக்கு வேண்டிய அங்கங்களும் இவளிடத்தில் இருந்தனவென்று காட்டிப் 'பெண்மை என்னும் அரசை ஆண்டனள்' என்ற கருத்தை இச்செய்யுள் மூற்றுவிக்கின்றபடியால் இச்செய்யுள் முற்று உருவக அணி ஆகும். ஒவ்வொரு அணிக்கும் பலவகைகள் உண்டு. முற்று உருவகம் என்பது உருவக அணியின் ஒருவகை. மற்றவகைகளை இடம் வந்தபோது கூறுவோம். இந்தச் செய்யுளிலேயே தொகை யுருவகம், விரியுருவகம், உருவகவுருவகம் என்னும் உருவக அணியின் வகைகளில் இன்னும் மூன்று அமைந்திருக்கின்றன. எனினும் சிறிது சிறிதாகப் பாடம் வளர்வதே படிப்போர்க்கு எளிதாயிருக்கும் என்னும் கருத்தினுல் அவைகளைப் பற்றி இங்குச் சொல்லவில்லை.

அரசன் தன் இராஜ்யத்தைப் பகைவர் பாழாக்காமல் தேர் யானை குதிரை காலாட்கள் என்னும் நான்கு படைகளால் காத்துக்கொள்ளுகின்ற விதமே தமயந்தியும் அவளுக்கு இருக்கின்ற அச்சம், நாணம், மடமை, பயிர்ப்பு என்னும் நான்கு குணங்களின் பெருமையால் தன் பெண்மைக்குத் தீதுவாராமல் காத்துக்கொள்கின்றுள். இவைகளில் அச்சம், என்பது செய்யத்தகாதனவற்றைச் செய்வதற்கு அஞ்சுகின்ற குணம். நாணம் என்பது வெட்கம், அயலாரோடு எளிதில் அளவளாவுதற்குக் கூசுகின்ற கூச்சம். மடமை, என்பது கபடு வஞ்சனை முதலியன இல்லாமல், வெளுத்ததெல்லாம் பால், என்று எண்ணுகின்ற மனத்தன்மை, பயிர்ப்பு என்பது நுண்ணிய உணர்ச்சி, (delicate modesty). அற்ப நினைவிற்கும் அற்பச் செய்கைக்கும் உடன்படாது அருவருக்கின்ற உள்ளப் பழக்கத்தினுல் உண்டாகின்றவோர் நுண்ணுணர்வு இந்தப் பயிர்ப்பு. இவை நான்கு குணங்களும் இவளிடத்தில் நிறைந்திருப்பதால் தன்னுலேனும் அயலாராலேனும் இவளது கற்புநிலை கெடாமல் காக்கப்

படுகின்றது. இனி, அரசருக்கு அமைச்சர் வேண்டும். வெளிநடக்கின்ற விஷயங்களின் உண்மைத் தன்மையை அரசனுக்கு அறிவித்து அதற்கு ஏற்றவாறு அவன் நடந்துகொள்ளும்படி செய்தல் அமைச்சர் தொழில். அவ்வாறே ஐம்பொறிகளும் தமயந்திக்கு நேர்மையான காரியங்கள் செய்துவைப்பதால் மந்திரிமார்களாகின்றன. அவளது இந்திரியங்கள் கள்வராய் அவள் மனதை அபகரித்துத் தீநெறியுட் சேர்ப்பதில்லை என்பது இதன் கருத்து. அரசிவள் இன்னவாறு நடாத்தும்போது காலில் கலீர் கலீர் என வொலிக்கும் சிலம்பெனும் ஆபரணங்களே முரச வாத்தியத்திற்குப் பதிலா யமைகின்றன. மாதர் கண்ணிற்கு உவமையாய் உரைக்கப்படும் பொருள்கள் தாமரை குவளை வண்டு மாவடு மான் விழிபோன்ற பல. இனிக் கூரிய பார்வைக்காக வேலையும் வடிவத்திற்காக வாளையும், பெண்கள் கண்களுக்கு உவமைகூறுவர். இவர்களால் பார்க்கப்பட்ட மனிதர்கள் மனதுள் தைத்துப் பிளக்கின்ற பார்வையாலும் வேலும் வாளும் மாதர் கண்களை நிகர்க்கும். அந்தப்படி அரசனுக்குரிய ஆயுதங்களும் தமயந்திக்குக் கண்களாக இருந்தன. குடையுமுண்டு கொற்ற மன்னவர்க்கு. வெயிலால் வாடியவர் குடைநிழலை அடைந்து துயரம் தீர்வர். அரசனது குடை மாந்தர் துயரத்தைத் தீர்ப்பதற்கு அடையாளமாய் அவனது அருளிற்கும் அன்பிற்கும் அறிகுறியாகும். குளிர்ந்த முகத்தவளாய்ப் பார்ப்பவர் களைதீர்க்கும் தன்மையளாய்த் தமயந்தி இருந்தாள் என்பதற்குக் கவி அவள் முகத்தை வெண்மதிக் குடையாக்கினர். இப்படி அரசிற்கு உரிய அங்கங்களைத் தமயந்தியினிடம் அமைத்துப் பெண்மை என்னும் அரசை ஆளவைத்து முடித்ததால்தான் இச்செய்யுள் முற்றுருவக அணி ஆயிற்று.

**குறிப்பு** :—நாற்படையா நல்லமைச்சா என்பது போன்று வருகின்ற தொடர்கள் நால்+படை+ஆ, நல்+அமைச்சு+ஆ, எனப்பிரியும். கடைசியில் இருக்கின்ற ஆ என்பது ஆக என்பதின் விகாரம். ஆக, என்னும் வினையெச்சத்தின் க கெட்டுப்போய்விட்டது. நால்படை ஆக, நல் அமைச்சு ஆக, முரசு ஆக கண் ஆக, ஆளுமே என்று முடியும். இந்த ஆக என்பதுதான் ஒவ்வொரு சமயம் ஆய், எனவும் திரிந்து வருவது.

22. மோட்டிளங் கொங்கை முடியச் சுமந்தேற
மாட்டா திடையென்று வாய்விட்டு—நாட்டே
னலம்புவார் கோதை யடியிணையில் வீழ்ந்து
புலம்புமா நூபுரங்கள் பூண்டு.

**பதப்பிரிவு** :—மோடு இளம் கொங்கை முடிய சுமந்து ஏற மாட்டாது இடை என்று வாய் விட்டு நாள் தேன் அலம்பும் வார் கோதை அடி இணையில் வீழ்ந்து புலம்புமாம் நூபுரங்கள் பூண்டு.

**அன்வயம்** :—நூபுரங்கள், நாள்தேன் அலம்பும் வார் கோதை அடி இணையில் வீழ்ந்து பூண்டு, "இடை, மோட்டு இளம்கொங்கை முடியச்சுமந்து ஏறமாட்டாது" என்று வாய்விட்டுப் புலம்பும்.

**கருத்து** :—தமயந்திக்கு முலைபெருத்து இடை சிறுத்து இருப்பதால், நடப்பாளாயின் பெருமுலையின் பாரத்தைத் தாங்கமாட்டாது சிறிய இடை உடைந்து விடும், ஆதலால் நடக்காதே என்று புலம்புவதுபோல், நடகருந்தோறும் அவள் காலிலணிந்த சிலம்புகள் ஒலிக்கும்.

**பதவுரை**

நூபுரங்கள் - (தமயந்தி அணிந்திருந்த) சிலம்புகள்,
நாள் - புதிய
தேன் - தேனனது
அலம்பும் - வழிகின்ற
வார் - நீண்ட
கோதை - பூமாலையை அணிந்த தமயந்தியினது,
அடி இணையில் - இரண்டு பாதங்களிலும்
வீழ்ந்து - விழுந்து
பூண்டு - (அப்பாதங்களை) பற்றிக்கொண்டு,
இடை - (உனது) இடுப்பானது
மோடு - உயர்ந்த
இளம் - இளமையான
கொங்கை - முலைகளை
முடிய - முற்றிலும்
சுமந்து - சுமந்து
ஏற - கடைத்தேற
மாட்டாது - முடியாது,
என்று - என்று
வாய்விட்டு - வாய்திறந்து
புலம்புமாம் - கதறியழும் என்று சொல்வார்கள்.

**விளக்கம்** :— புலம்பும் - கதறியழும் (பயனிலை). எது புலம்பும்? நூபுரம் - சிலம்புகள். நூபுரம் என்ன செய்து புலம்பும்? வீழ்ந்து புலம்பும் - விழுந்து புலம்பும். இன்னும் என்ன செய்து புலம்பும்? பூண்டு புலம்பும் - பற்றிக்கொண்டு புலம்பும். எங்கே விழுந்து பற்றிக்கொண்டு புலம்பும்? அடி இணையில் - இரண்டு பாதங்களிலும். யாருடைய அடியிணையில்? வார்கோதை அடியிணையில் - நீண்ட பூமாலையை அணிந்த தமயந்தியின் இரு பாதங்களிலும். அந்தக் கோதை எப்படிப்பட்டது? அலம்பும் வார்கோதை - வழிகின்ற நீண்ட பூமாலை. எது அலம்பும்? தேன் அலம்பும். எப்படிப்பட்ட தேன்? நாள்தேன் - புதிய தேன். புதியதேன் வழிகின்ற பூமாலையை அணிந்த தமயந்தியினுடைய இரண்டு பாதங்களிலும் விழுந்து பிடித்துக்கொண்டு, சிலம்புகள் என்னவென்று புலம்பும். மாட்டாது, என்று புலம்பும் - முடியாது என்று புலம்பும். என்ன மாட்டாது? ஏறமாட்டாது - கடைத்தேற மாட்டாது. என்னசெய்து கடைத்தேறமாட்டாது? சுமந்து ஏறமாட்டாது. எவ்வளவு காலம் சுமந்து? முடியச் சுமந்து - முற்றிலும் சுமந்து. எது முடியச் சுமந்து ஏறமாட்டாது என்று நூபுரம் புலம்பும்? இடை - அவளது இடுப்பு. இடுப்பு எதைச் சுமக்க முடியாதாம்? கொங்கை - முலைகளை. எப்படிப்பட்ட கொங்கைகள் அவை? இளம் கொங்கை. இளங்கொங்கை எப்படிப்பட்டவை? மோட்டு இளம் கொங்கை-உயர்ந்த இளமை பொருந்திய கொங்கை.

**விரிவுரை** :—இடை சிறுத்தும் முலை பெருத்தும் இருப்பது மாதருக்கு இலக்ஷணம். அவ்விரு தன்மையையும் இச்செய்யுள் வர்ணிக்கின்றது. நமக்கு அருமையான ஒருவன் செய்யத்தகாத காரியத்தைச்செய்து தனக்கே தீங்குதேடிக் கொள்வதைப் பார்க்கச் சகியாது அவன் காலிலும் விழுந்து 'அவ்வாறு செய்யாதே' என்று வேண்டிக்கொள்வதுபோல், சிலம்பு தமயந்தியின் காலைப்பிடித்துக்கொண்டு அவள் நடக்கும்போதெல்லாம், 'நடக்காதே, நடக்காதே, நடந்தால் நின் கொங்கையின் பெரும் பாரத்தினுல் நுண்ணிய இடை ஒடிந்துபோகும்' என்று வாய்விட்டுக் கதறி வேண்டிக் கொள்கின்றனவாம். 'அம்சிலம்பே வாய்விட்டு அரற்றுவன,' என்று முன் இக்கவி கூறியதை விரித்து இங்கு அவை என்னவென்று அரற்றுகின்றன என்பதைக் காட்டுகின்றார். சிறந்தகவி யொருவன் எழுதிய செய்யுளுக்கு வாய்த்தபொருள் எதுவென்று எடுத்துக்காட்ட வல்லாரும் கவிகளே ஆகின்றனர். அயோத்திமா நகரத்தைப் புகழ்ந்து பாடிய கம்பர்,



"துடியிடைப் பணைமுலைத் தோகை யன்னவர்
அடியிணைச் சிலம்புபூண் டரற்று மாளிகை"

என்று, [உடுக்கைபோன்ற இடையும் பருத்த முலையும் உடைய மயிலினழகு வாய்ந்த மாதர்களின் இருபாதங்களிலும் சிலம்புகள் பற்றிக்கொண்டு கதறுகின்ற அரவம் நிறைந்த மாளிகை] சிலம்பு அரற்றியதைச் சொன்னரேனும், அவை என்ன சொல்லி எதற்காக அரற்றின என்பதைப்பின் புகழேந்தி விளக்கியதா லறிகின்றோம். கம்பர் குறிப்பாக விட்டதைப் புகழேந்தி இங்கு விரிவாகக் காட்டியது போலவே, அவர் விரிவாகச் சொல்லியதை இவர் குறிப்பாக உணர்த்துவதும் இனிவரும் சில செய்யுள்களில் அறியலாம்.

இச்செய்யுளில் அமைந்த அணி, தற்குறிப்பு ஏற்ற அணி. இயல்பாக நிகழ்கின்ற நிகழ்ச்சிகளுக்குக் கவி தன் கருத்தின் குறிப்பை ஏற்றி வேறொரு காரணம் கூறிக் கதையோடு சேர்த்துக் கொள்கின்ற அழகிற்குத் தற்குறிப் பேற்றவணி என்று பெயர். இயற்கையாய் ஒன்றற் கமைந்த தன்மையை விட்டுவிட்டுக் கவிக்கு அவசிமான குறிப்பை ஏற்றதால், அதற்கு அந்தப் பெயர்வந்தது. சிலம்புகள் காலைச் சூழ்ந்திருப்பதும், நடக்கும்போது ஒலிப்பதும் இயற்கை. தமயந்தியின் கொங்கைகள் பெரியன, இடை சிறியது, காலில் அவள் சிலம்புகள் அணிந்திருந்தாள், ஆகிய இவை மூன்றினையும் ஒன்றாய்ச் சேர்த்து முலையின் பாரத்தை இடை தாங்கமாட்டாது என்றுதான் சிலம்புகள் காலைப்பிடித்துக்கொண்டு கதறுவதாகக் கவி தன்னுடைய குறிப்பை ஏற்றி அமைப்பதால் இது தன் குறிப்பு ஏற்ற அணியாகும். தனக்களித்த இருவரத்தை இரக்கமில்லாமற் தசரதன்பால் கேட்டு நின்ற கொடியவள்மேல் கோபங்கொண்டவன்போல் சூரியன் சிவந்து தோன்றினன், என்று கம்பர் கூறுவதும் தற்குறிப்பு ஏற்ற அணியாம். சூரியன் உதயத்தில் சிவந்திருப்பது இயற்கை. எந்நாளும் அவன் சிவந்துதான் தோன்றுவான். எனினும் இந்நாள் அவன் சினத்தினுல் சிவந்தான் என்று தன்னுடைய குறிப்பை அச்சூரியன்பால் ஏற்றிவிட்டார். சமஸ்கிருத அலங்கார சாஸ்திரத்தில் இந்தத் தற்குறிப்பேற்ற வணியை, உத்ப்ரேக்ஷாலங்காரம் என்று அழைப்பர். ஆங்கிலத்தில் இருக்கும் Pathetic Fallacy என்னும் Figure of Speech இதை ஒருவாறு ஒக்கும்.

காந்திமதி என்னும்

# காந்தாரநாட்டுக் கட்டழகி.

(111-வது பக்கத் தொடர்ச்சி)

## 6. முள்ளெடுக்கும் முள்.

*சிலர் செயலளவில் சிறியராயினும் அதிர்ஷ்ட வயத்தால் ஒவ்வொருவேளை முக்கியஸ்தானம் வகித்துவிடுகின்றனர்.*

தையல்வல்ல தனஞ்சயன் முன்னிரவு கலகம் நடந்தவிடத்தில் அற்றுவிழுந்த கையைக் கண்டெடுக்க நேர்வதன்முன் அவன் மனையின்கண் சிறு நாடகமொன்று நடைபெற்றது. பல்லோர் எதிர்த்தபோது தனியிருந்து தடுத்துநின்ற கலாநாதனுக்கு உதவியாய் அத்தெருவில் வசிப்பவர் குழுமிய அமலை பள்ளியிலிருந்த நம் தனஞ்சயன் செவிக்கு எட்டியதும் அவன், 'கெட்டது குடி' யென்று தன்னிரு கண்களையும் இறுக இழுத்து மூடிக் காலொடு தலைபோர்த்துக்கொண்டு விட்டான். ஆனுலோ அதே சமயம் அவன் மனைவி பாஞ்சாலி திடுக்கிட்டெழுந்தாள். சாளரத்தைத் திறந்து தெருவில் அவ்வீதி வசிப்போர் போர்கருதிப் போவதைக் கண்டாள். "வந்தனரோ மீண்டு மப்பெருங்குன்றக் கொலைஞர்," எனக் கூவினளாய் வந்து தன் நாயகனை எழுப்பினள். தூங்காதவர்களை யெழுப்புவது சுலபமன்றுகையால் அவன் கண்விழிக்கவில்லை. இது பொய்த்துயில் என்றறிந்த அவளுக்கோ கோவம் மேன்மேலும் மூள்கின்றது. "மாண்டாயோ என் கணவா" என்று வைது, "இதோ, உன்னைக் குளிப்பும் ஆட்டிவிடுகின்றேன்" என அருகிருந்த நீரைக் குடத்தோடும் எடுத்தாள். இனி விஷயம் விஞ்சிவிடு மென்றுணர்ந்த தனஞ்சயன் தூக்கனு கண்டவன்போல் பதறி எழுந்து தன் மனையாளின் குடமுயர்த்திய கையைப் பிடித்துக்கொண்டு, "என்ன பாஞ்சா, என்ன விது! என்னை யுன்வாயால் இந்நாளளவு சுட்டதையெல்லாம் இன்று ஆற்றப்புகுந்தது எவ்வருள்பற்றியோ! இனி உய்ந்தேன்" என்றான்.

"இந்தச் சித்திரப் பேச்செல்லாம் சும்மாவிட்டு விடும்! பெருங்குன்றத்துப் பாதகர் கொள்ளைக்கு வந்துவிட்டனர். ஊரெங்கும் அல்லோல கல்லோலம். இங்கே சவம் மாதிரி..."

"ஆம், என்னையேன் வைகிறாய். நானு கொள்ளையடிக்க வரச்சொன்னே னவர்களை!"

"சரிசரி, அதுதான் குறை. ஊருக்கு உதவியாய் உடனெழுந்து போகாமல் இங்குக் கட்டிலிலே உட்கார்ந்து காலாட்டிக்கொண் டிருக்கின்றீரே! புருஷனும் புருஷன், நல்ல புருஷன்!"

"என்ன, பாஞ்சா, இத்தனைபேர் சென்றிருக்க நான் போனுலென்ன இருந்தாலென்ன!"

"அப்படியானுல் போகிறது தானே!"

"சொல்வதெளிது, அங்குச்சென்று செத்துக்கிடந்தாலல்லவோ தெரியும்!"

"சண்டைக்குச் செல்பவரெல்லாம் செத்தே போய் விடுகின்றனரோ!"

"பாஞ்சா, வேண்டாம். என்னைத் தூண்டாதே. உயிர் பயம் எனக்குண்டு. அதற்கும் உன்மேலிருக்கும் ஆசைதான் காரணம்."

"அஞ்சிய நெஞ்சுடையாரிடத்து ஆசைதான் எங்ஙனம் அமையும். இதுவெல்லாம் என்னை வஞ்சிப்பதற்கன்றி வேறில்லை. நுமக்குப் பயந்தான் பிரதானம்."

என்று இன்னவாறு பாஞ்சாலி இரக்கமின்றி இயம்பியவளவில் அன்னதற்கு ஏற்றதொரு எதிர்மொழி விளம்பத் தனஞ்சயன் தன் வாயுள்ளே தேடித் தவித்தபோது, 'துரத்துங்கள் பிடியுங்கள்' என்று ஓடினேரைப் பின்பற்றக் கலாநாதன் அங்குக் கூவிய குரல் இவ்விருவரது செவியிலும்பட்டது. இதிலிருந்து கலாநாதன் இருப்பதும் பகைவர் ஓடுவதும் உணர்ந்து இவ்விரண்டாலும் சிறிதுபயம் தெளிந்தவனுகி நம்தனஞ்சயன் மனைவிக்குப் பெருமையாய்ப் போனுற்றான் இனி என்னென்று எண்ணிப், "பாஞ்சா, பயமா எனக்கு! கனவிலும் நான் அச்சம் அறியேனே! உன்னன்பைச் சோதிக்கவே இதுகாறும் சொன்னேன். இதோ போகின்றேன் பார்" என்று புறப்பட முயன்றான். அப்பொழுது பாஞ்சாலி, "வேண்டாம். நீர் சென்றங்கே கலாநாதர் காலைத்தான் கட்டிக் கொள்வீர். உம்மைக் காக்கத்தான் அவருக்குக் காலம் சரியாயிருக்கும். நின்று பயந்தீர், இப்பொழுது சென்று கெடுப்பீர்" எனத் தடுத்தாள். தடுக்கின்றாளென்பது திட்டமானதும் அவன் 'போகத்தான் போவேனென்று' தன் கத்திரிக் கோலாயுதத்தைக் கையி லெடுத்தான். இவ்விதம் இவன் எடுப்பதும் அவள் தடுப்துமாய்ச் சிறிது நேரம் கழிந்தது. இதற்குள் எதிர்த்தோரைத் துரத்திச்சென்றவர்கள் மீண்டுவருபவராய்த் தெருவழி போகும்போது அவர் தம்முள் பேசிச்சென்ற மொழி

களால் பகையொடுங்கிய தென்பது தனஞ்சயனுக்கு நிச்சயமாயிற்று. இதே வார்த்தைகள் தன் மனைவியின் காதிலும் பட்டிருக்குமே என்பதை மறந்து நம் வீரத்தையற்காரன், "இனித் தாமதிக்கலாகாது. கலாநாதனுக்குப் போரில் வலக்கைபோன்ற யான் இங்கிருந்தால் என்ன செய்வான் பாவமவன்," என்று கூறி விரைவுடன்வெளிவந்து வீதியின்கண் கலாநாதனிடம் மீள்பவரோடு கலந்து கொண்டான். இவ்வாறு போர் நடந்த விடம் வந்துசேர நேர்ந்தவனாகிய தனஞ்சயன் முறிந்த கை யொன்றைத் தெரிந்தெடுத்ததும் அதைக் கொண்டு அவன் யூகித்துச் சொன்னதும் அவனுக்கு அளவற்ற பெருமையைத் தந்தது. மறுநாள் அக்கைக் குறையை முன்னிட்டு அரசனிடம் முறையிட வேண்டுமென்று அங்கிருந்தோர் கொண்ட தீர்மானத்தால் அவனது பெருமை பின்னும் பெருகியது. பொழுது புலர்ந்ததும் கலாநாதனையும் மற்றவர்களையும் வந்து சந்திப்பதாகச் சொல்லி அவன்,பெருமைக்கு இலக்காயிருந்த அக்கையின் துண்டைத் தன் பைக்குள் பொதித்துவிட்டிடம் விரைந்து மீண்டான். வீடு சேர்ந்ததும் சேராததுமாய் அவன் பாஞ்சாலி படுத்திருந்த இடம் ஓடிப் "பாஞ்சா, பாரடீ இக்கையை. நான் துணித்தேனடீ. நானே துணித்தேன். கலாநாதனைக் குத்த ஓங்கிய கையடீ யது. யானருகிருந்து இதை வீசியிரேனுயின் பாவம் கலாநாதன் கதி என்னவாயிருக்கும்," என்று குதூகலத்துடன் கூவி அக்கைக்குறையை யவள்முன் சமர்ப்பித்தான். அவன் மனைவியோ எலியொன்று முன்வந்து யானையை விழுங்கிவிட்டேன் என்று பூனைக்குச் சொன்னால் அப்பூனை எவ்வளவு நம்பிக்கையுடன் ஏற்குமோ அவ்வளவு நம்பிக்கையுடன் கேட்டாள். இது பாவம் தனஞ்சயனுக்கு மிகுந்த துக்கத்தைத் தந்தது. ஒருவன் சொல்லிவந்த பொய்யைக் கேட்டவர் நம்பிவிட்டால் சொன்னவன் தான் சொன்ன பொய்யைப் பொய்யேயென்று கொண்டு சும்மாவிருந்து விடுகின்றான். ஆனால் கேட்டவர் நம்பாவிட்டாலோ தான் துவக்கிய பொய்யை மேன்மேலும் வற்புறுத்த முயன்று கடைசியில் அப்பொய்யைத் தானே மெய்யென்று நம்பத் தலைப்படுவது சகஜம். எனவே தனஞ்சயன் வெகுநேரம் அக்கையை வெட்டிய காரியத்தில் தான் செய்த சாகசங்களையும் அது தொடர்பாய் அவன் இயற்றிய பல போர்விந்தைகளையும் மனைவிக்கு வெகு ஆர்வத்துடன், முன்னிற்குப் பின்சொன்ன முரண்களைப் பொருள்படுத்தாது, எடுத்து ஓதினான். இன்னவாறிவன் சொற்பொழிவு நடத்திய போது பாஞ்சாலி அதைச் சிறிது இடைதடுத்து "எத்தால் வெட்டினீர்" என்றொரு விஷயம் கேட்டாள். "எத்தாலா?" என்றான் தனஞ்சயன், ஒருவாய் எச்சில் கூட்டி விழுங்கினான். "என்! கத்திரிக்கோலால்! வேண்டுமானால் கலாநாதனையே கேட்டுப்பார்!" என்றான்.

"சாக்ஷிவேண்டாம். சட்டைக்குத் துணிவெட்டும் போது நீர் இரண்டொரு விரலையும் சேர்த்துக்கொள்ளக் கண்டிருக்கின்றேன். அந்தப் பழக்கம் முதிர்ந்து இன்று கணுக்கை வரையிலும் எட்டிவிட்டது போலும் எதோ நுமது மறுகையைக் காட்டும், முதலில் அது முழுதோ பார்ப்போம்!" என இயம்பினள் கொடுமைகூர் பாஞ்சாலி. வந்தது சினம் தனஞ்சயனுக்கு "என்னை யாரென்றெண்ணினாய் பித்தி. நம் தொழிலைப் பழித்ததன்றி என் வீரத்திற்கும் பழுதுரைத்தாய். மற்று, இக்கை யாருடையதென்பது கூட அங்குக் கூடியவர்களால் ஊகிக்க முடியவில்லை. இதன் மெல்லிய தன்மையிலிருந்தும் இவ்விரலிலிருக்கும் மோதிரத்தாலும் இக்கைக்கு உடையான் பிரபுக்கள்தம் மரபைச்சேர்ந்தவனாயிருத்தல் வேண்டுமென்று நான்தான் முதல் முதல் அனுமானம்கொண்டு அவர்களுக்கு எடுத்துக்காட்டிய பின் தெரியவந்தது......என்னளவு புத்தி யாருக்கிருக்கின்றது. தெரிந்ததா! என்று மருட்டினான்.

"ஒன்றுதான் தெரியவில்லை," என்றாளவள்.

"என்னவது?"

"குத்தவந்தவனைப் பார்த்துக்கொண் டிருந்து வெட்டின ஒருவர், கடைசியில் ஊகிக்கவேண்டிய கதிக்கு வருவதேனோ, என்பதுதான்!"

"அப்பா! இந்தப்பெண்களுக்கே தீராச்சந்தேகம்...... எனக்குக் களைமேலிட்டுப்பெரிய தூக்கம் வருகின்றது. பாஞ்சா, பொழுது விடிவதற்குள் எழுப்பிவிடு. ஆலோசனை சபையை எனக்காகக் காக்கவைக்க இஷ்டமில்லை. நானில்லாமல் என்ன நடக்கும்," என்று தனஞ்சயன் பாஞ்சாலி கொண்ட சந்தேகம் தனக்குங்கூடச் சந்தேகமாய் முடியப் படுக்கைக்குச் சென்றான். எனினும், இரதி பௌர்ணிமி தினத்திற்கு முன்னிரவு என்பதற்கொக்க அவனுக்கும் தூக்கம் வரவில்லை. மற்றவர்மீது காதலால் நித்திரை கொள்ளாதிருந்தனர் பிறர் பிறர். தனஞ்சயனுக்குத் தூக்கம் பிடிக்காமலிருந்ததற்கோ அவனுக்குத் தன்மேலிருந்த காதலே காரணம். "எப்பொழுது இரவு விலகுமோ, எப்பொழுது சபைக்குச் செல்வேனோ, எப்பொழுது என்னை எல்லாரும் வந்து கையைக்கண்டெடுத்த விதத்தைக் கேட்பார்களோ," என்றெண்ணி யெண்ணி யேங்குவான். இதற்கிடையே தன்னைத் தன்மனைவி சொல்லால் மடக்கிவிட்டதற்கு வருந்துவான். "கத்தரிக்கோலால் வெட்டினேனென்று ஏன் பிதற்றிவிட்டேன். அங்கே ஒரு கத்தி கிடைத்தது, அதனால் வெட்டினேன் என்று சொன்னாலோ! அல்லது குத்த வந்தவன் கத்தியையே பிடுங்கி வெட்டினேன் என்று சொல்லியிருக்கலாகாதா!......எல்லாம், பின்புத்தி எனக்கு......இல்லை. கத்தரி என்றேதான் இழவு சொன்னேனே! அந்த இழவையே சாதித்தாவது இருக்கலாம்......என், கத்தரிக்கோல் வெட்டாதோ! வா, உன் கையை வெட்டிக் காட்டுகிறேன், என்று சொல்லியிருப்பேனானால் பாஞ்சாலி என்ன செய்திருப்பாள்......" என இவ்விதமாய்த் தான் விட்டகுறைகள் பற்பலவற்றை விவரித்துக் கழிவிரக்கம் கொள்வதும், நாளை இவ்வகை முரண்களுக் கிடங்கொடாமல் அவன் சொல்லப் போவனவற்றைத் திட்டம் செய்து கொள்வதுமாய் இரவைக் கழிக்கலாயினான்.

பொழுது புலர்ந்ததும் தனஞ்சயன் தன் வீடுவிட்டகன்று கலாநாதனது வீட்டிற்குப் போய்ச் சேர்ந்தான். அங்கு யாரையும் காணோம். இவனவ்வளவு அவசரம் யாருக்கிருக்கும்! ஊருக்குமுன் தான் வந்துவிட்டு மற்றவர் காலம் தாழ்கிறார்களென்று கோபம்கொண்டான். ஆனால் நேரம் கழியக்கழியத் தனஞ்சயன் கண்டெடுத்த கையில் அரசக்குறி இருந்ததென அனுமானம் செய்து மன்னனிடம் முறையிடுவதென்ற தீர்மானத்துடன் முன்னிரவு கலைந்த நகரவாசிகள் இருவர் மூவராய்ப் பலர் கலாநாதன் வீட்டண்டை வந்து சேரலாயினர். அச்சமயந்தான் கலாநாதன் கருணாகரரது அகத்தில் சிற்றுண்டி முடித்துக் காந்திமதியுடன் நாம் முன் கண்ட காதல்விவாதம் செய்திருந்த சமயம். கலாநாதன் இல்லாமல் மேல்செய்வன சிந்திக்க இயலாது அவன் வீட்டில் கூடிக் காத்திருந்த நகரவாசிகளுக்குக் "கலாநாதன் நாடுமிடம் யானறிவேன்," என்று தனஞ்சயன் சொல்லிக் கருணாகரர் வீட்டிற்கு ஓடிவந்து நகரத்தவர் காத்திருப்பதைச் சொல்ல, அவர் கலாநாதனைக் கூட்டிக்கொண்டு தனஞ்சயனுடன் சென்றனர். கலாநாதனது வீடுவந்து சேர்ந்ததும் அங்குப் பலர் சிறுசிறு கூட்டங்களாகக் கூடிச் சுளித்த புருவத்தினராய் உரத்துச் சிலரும் தாழ்ந்து சிலரும் பேசியிருக்கக் கண்டார். தனஞ்சயனோ தாவிப்பாய்ந்து ஒவ்வொரு கூட்டத்துடனும் கூடிக்கொண்டான். ஒவ்வொருவனையும் தனியிடம் அழைத்துச்சென்று என்னவோ இரகசியம் பேசிப் பேசி யனுப்பினான். கடவுளோ இவனது ஊக்கத்திற்கேற்ற உயரம் கொடுக்கவில்லை. ஆதலால் அவனுக்குச் சம உயரமுள்ளவர்களுடனேயே காதுடன் வாய்வைத்துச் சொல்ல முடிந்தது. இவ்வளவினர் வெகு சிலர். எனினும் நெடியோரையும் விட்டவனல்லன். அங்கிருந்த திண்ணை வாயிற்படி போன்றவைகளின் உதவியால் எடுத்த கருமத்தைத் தொடுத்தே முடித்தான். இவ்விதம் இவன் நிலைதரியாது சாற்றிக் கறங்குபோல் திரிந்தது என்ன பரம இரகசியமோ எனின்.........சென்ற இரவு நடந்த நிகழ்ச்சியில் தானும் சம்பந்தப்பட்டுள்ள பெருமையைத் தான் இரகசியமாய்ப் பறையறைந்தான். அச்சச்சரவில் தான் செய்த சாகசங்களை எண்ணிறந்த பாடபேதங்களோடு பிரசுரம் செய்யும்போது தனஞ்சயனுக்கு அரிச்சந்திரனின் நினைவு எள்ளளவுமில்லை என்பது திண்ணம். "எல்லாம் நிஜம். நானே யிருந்து என் கண்ணா



லேயே பார்த்தேன்......முதல் முதல் ஓடிவந்தது நான் தான். நானில்லாமற் போனால் அப்பாதகர் கருணாகரர் வீட்டிற்புகுந்து அவர் கழுத்தை வெட்டிவிட்டுப் பெண்ணையும் தூக்கிக்கொண்டு போயிருப்பார்களே........ நல்லவேளை எந்த தெய்வமிருந்து என்னை யனுப்பித் தந்ததோ!.........இதென்ன அநியாயம்.........இந்தக் கொள்ளை இன்னொருதரம் நேராத வழியைத் தேடியே தீரவேண்டும். இந்தப்பழியையும் வாங்கியே தீரவேண்டும்......" என்று தனஞ்சயன் வீராவேசத்துடன் சொல்லி வருமளவில், தனமித்திரர் என்பவர், "தனஞ்சயா, நில்; நிகழ்ந்ததிதுவெனக் கருணாகரரே கூறட்டும்" என்றவனை விலக்க எல்லாரும் அக்கருணாகரரை நோக்கினர். கருணாகரர் அரைமனதுடன் மொழிகளை மென்று விழுங்கி என்னவோ ஒருவாறு சொல்லித் தன் பொருட்டு அவ்வூரார் அரண்மனையாருடன் பகை கொள்ள நேரிட்டதற்கு வருந்துவதாகவும், நடந்ததெல்லாம் விளையாட்டுவகையில் யாராவது செய்திருக்க வேண்டுமென்பது அவரது உத்தேசமென்றும், இனிக் காந்தி படுக்கும் அறையின் பலகணிகளுக்கு இருப்புக் கம்பி இட்டுவிடுவதாகத் தீர்மானித்திருப்பதாயும், தீங்கொன்றும் யாருக்கும் நேராததால் இந்த விஷயத்தை இதனுடன் விட்டுவிடுவதே நலமென்றும் தெரிவித்துக்கொண்டார். ஆனாலோ, இளையவனொருவன் ஏணிமீதேறியதாவது, கலாநாதனவனைக் கீழே தள்ளியதாவது, பிறகு அவனைத் தான் உள்ளழைத்துச் சென்றதாவது, புறக்கடைவழி யவன் தப்பிப்போயினதாவது அவர் வாயினின்று வெளிப்படவேயில்லை...... "விளையாட்டு விஷயம். வேஷக் கூத்து, விட்டுவிடுங்கள்." என்று முடித்தார் கருணாகரர்.

"மற்று, இவ்வளவும் வேஷக்கூத்தேயாமாயின் நம் கலாநாதன் ஒரு பிரபுவின் கையைத் துணித்தது பெருங் குற்றமாகுமே. எனின் தண்டனைக் காளாகின்றான். இழைத்தது எவரானாலும் கண்டவிடத்துக் குற்றத்தைக் கடியவேண்டியது குடிகளின் கடமையாதலால் நாமே யவனைக் கொண்டுபோய் நியாயாதிபதியினிடம் சேர்த்துவிடவேண்டும்," என்று, கருணாகரர் சொல்லியதைச் சோதிக்கவோ அல்லது நியாயமே நினைத்தோ தனமித்திரர் சொன்னார். கருத்து எதுவாயிருப்பினும் காரியத்தில் அது முன்னதாகவே முடிந்தது. இவ்வுரை கேட்டதும் கருணாகரர் படபடத்து, "எனக்குத் தெரிந்ததெல்லாம் உங்களுக்கும் தெரிந்திருக்குமாயின் இவ்விஷயத்தில் நீங்கள் தலையிட்டுக் கொள்ளமாட்டீர். இனி உங்களிஷ்டம். உண்மையைச் சொல்லிவிடுகின்றேன்...... விளையாட்டுமன்று.....வேஷக்கூத்துமன்று. நீவிர் குற்றவாளியாக்கப் பார்க்கும் இக்கலாநாதன் மாத்திரம் வந்திரானானால் என் குடி கெட்டிருக்கும்......" என்றனர்.

கருணாகரர் முதற்சொல்லியபடி, அங்கிருந்தோர் மேல் நடப்பதொன்று மில்லையென்று கலைந்துவிட்டால் தான் கண்டெடுத்த கை முன்னுக்கு வர ஏது இல்லாமற்போய் விடுமேயென்று ஏங்கியிருந்த தனஞ்சயன் இனித் தனக்கும் ஒரு வழி பிறந்ததெனத் துணிந்து, "நான் வந்திராவிட்டால் மாத்திரம்! என்ன, கருணாகரரே, போர் ஆரம்பத்திலேயே நீரென்னை அங்குப் பார்க்கவில்லையா?" என்று சினத்துடன் வினவினான்.

"யானுன்னைப் பார்த்தது அந்தத்தில் தான்!" என்று கருணாகரர் மறுத்துரைத்தார்.

தனக்கு ஏவிய இந்த இழிவுரையை அவருக்கே திருப்ப எண்ணித் தனஞ்சயன், "ஆமாம், மறந்தேன். குத்தும் வெட்டும் நாங்கள் வெளியே கொடுத்துக் கொண்டிருந்த போது நீர் உட்புறம் இரட்டைத் தாழ்ப்பாள் இட்டுக் கிடந்தீர். யான் வந்ததும் வென்றதும் உமக்கெப்படித் தெரியக்கூடும்!" என்று சிரித்தான். ஆனால் இவனுடன் சிரிப்பார் ஒருவருமில்லை. ஆகையால் அவன் செய்ததற்குச் சாக்ஷிபலம் தேடவேண்டியது அவசியமாயிற்று. தன்னைச் சமயத்தில் கைவிடான் என்னும் நட்பினாலோ, மறந்தேனும் 'ஆம்' என்றால் ஆகாதா என்னும் ஆசையாலோ தனஞ்சயன் கலாநாதனருகு சேர்ந்து, "நாதா, நீயேனும் என்னைப் போர்நடுவில் பார்த்தனை அன்றோ," என்று எஞ்சாமல் கேட்டான்.

"இல்லையே! ஆயினும் ஒன்றரை முழமே ஓங்கி வளர்ந்திருக்கின்ற நீ எனக்குப் புலப்படாமலிருந்திருக்கலாம்," எனக் கலாநாதன் கூறக்கேட்டு அங்கிருந்தோரனைவரும் நகைத்தனர். நம் தனஞ்சயனும் கூடச்சேர்ந்து அவர்கள் ஓய்ந்தபின்னும் தான் ஓயாது சிரித்துப், "பரிகாசம் கிடக்கட்டும், கருணாகரரைக் காப்பாற்ற முற்பட்டோடி வந்தேன் நான்," என்று திட்டமாய்ச் சொன்னான். கலாநாதன் அவனது தோள்களைக் குலுக்கித் "தனஞ்சயா, வந்த நீ யேன் என் கண்களிற் படவில்லை. உன்னனைய வீரனொருவன் துணை எனக்கிருந்தது தெரிந்திருந்தால் கத்திகூடக் கொள்ளாமல் நான் போரிடத் துணிந்திருப்பேனே," என்றனன்.

"எதிர்த்தோரைக் கையடிகாலடி நீயடித்துத் தகர்க்கப் பின்னின்று நான் உன் முதுகை யாரும் குத்தாமல் காத்தேனே. இல்லையெனில் வாமன, உன்கதி யாவதென்ன! அந்நன்றி மறந்து நீயோ என்னைக் கண்ணிலும் கண்டதில்லை என்கிறாய்......கடவுளுக்குத் தெரியும், போ!"

"அக்கடவுள் என் முதுகிலும் ஒருகண் வைத்திருந்தால் எனக்கும் தெரிந்திருக்கும். உன்னைநான் காணாதது உன் ஆற்றலின் பழுதாலன்று. எனது யாக்கை யமைப்பின் குறைவாற்றான் போ!"

இதற்குள் அந்நகரத்தவர் நன்மதிப்பைப் பெற்றுள தனமித்திரர்,"குதர்க்கத்தை இருவரும் நிறுத்துங்கள்,... ......காரியத்தைப் பார்ப்போம். முன்னிரவு நடந்தன விநோதமாயினும் விளையாட்டன்றென்பது விளங்கிக் கிடக்கின்றது. செல்வாக்குச் செருக்குடையோனொருவனால் அக்காரியம் செய்யப்பட்டுளது என்றதை வெட்டிக் கிடந்த கைதானே காட்டித் தருகின்றது. (தனஞ்சயன், 'நான்தான் அதைக் கண்டெடுத்தது, நான்தான் அதைக் கண்டெடுத்தது' என்று அயல்நின்றோர்க்குப் பலதரம் சொல்லிச் சொல்லிக் களிப்படைந்தான்). சட்டமோ பிரபுக்களுக்கும் பாமரர்க்கும் ஒன்றேயாதலால் வரம்பு கடந்து நம்மூர்க் கன்னியர் மானத்திற்கொரு பழிதேடிய பாதகனைச் சும்மா விட்டிருக்கலாமா......" எனச் சொல்லி வருகையில் அச்சபையிலுள்ளோர், "இரோம், ஒருநாளு மிருக்கமாட்டோம்" என்றொரு வாயாய்க் கத்தினர்.

தனமித்திரரது பிரசங்கமும் அதுகனற்றிய ஊக்கமும் கருணாகரருக்குச் சம்மதமாயில்லை. ஆதலால் வயதொடு அறிவும் வளர்ந்த அவர், "செய்தவனெவனாயினும் செய்கைதான் தீதாயினும் முடிவில் பழுதொன்றும் யார்க்கும் நேரத்தான் இல்லையே. வீண்பகை கொண்டு கொதிப்பது நுமக்கழகிதோ!" எனச் சினந்து கூறினர். இதைக்கேட்டவர்கள் தன் கருத்துக் கிசைபவர்போல் தோன்றியதால் கருணாகரர் பின்னும் பகர்வார், "இருக்கட்டும், நாம் யாரிடம் சென்று முறையிட்டுக் கொள்வது! நடுநின்று நியாயம் தீர்ப்பதார்! நமக்கு ஓரம் சாரா நீதி கிடைப்பது எங்ஙனம்!......குற்றமோ செய்தவன் அரசனுக்கண்மியன் என்பது நமது துணிபு. அரசனோ உயிருடைந்து உடல் தளர்ந்திருக்கின்றான். எம்மிறைவன், ஆதலால், நம்மைத் தன்னவை மன்னர்மாட்டுக் கைகாட்டி யனுப்பிவிடுவது திண்ணம். அவர்க்குப் பின் பிறந்தோன் விராடபத்ரன் இவ்வழக்கைத் தீர்க்க நேர்ந்தாலோ......!

"விராடபத்ரனா வழக்கறுப்போன்! நன்று, நன்று! அவன் கற்ற மனுமுறையில் ஊதியம் இல்லா நீதியும் இலதே! பேரவா பிடித்தாடும் அக்காதகன் வேண்டாம்!" எனப் பலர் முன்போற் கூவினர்.

"......ஒருகால் நம் சித்ராங்க இளவரசனை இச்சிக் கறுக்க விதித்தா லென்செய்வீர்!"

"அச்சிறியன்! அக்களிமகன்! அவனோ நடுநிலை நீதி வழங்குபவன், நன்று, நன்று," என்றவனையும் மறுத்தனர்.

"ஆயின், கஜேந்த்ர விம்மனது நீதியில் நமக்கு நம்பிக்கையேயோ!" எனக் கருணாகரர் எழுத்தெழுத்தாய் நிறுத்திச் சொல்லிக் கேட்டார். இதற்கோ முன்னளவு விரைவில் அவ்வவையோரிடமிருந்து உத்தரம் பிறக்கவில்லை. ஒருவரையொருவர் எதிர்நோக்கி எல்லோரும் திகைத்தனர். அச்சமயம் கலாநாதன் கருணாகரருகில் வந்து, "எதிது ஐய, பிரபுக்களுக்கும் நமக்குமுள்ள மாறுபாட்டைத் தீர்க்கக் கஜேந்த்ரவிம்மனையோ கூப்பிட்டழைக்கின்றீர். கலங்கிய மனத்தால் வாய்தந்த

வார்த்தை போதும். இவனைவிடக் கூளிக் குலத்திடையே சென்றாலும் தக்க நியாயம் கிடைக்குமே," என்றுரத்துச்சொல்ல எல்லோரும் நடுக்கமுற்றுக் கவற்சியுடன் நாற்றிசையும் கருதி நோக்கி நிற்கத் தனமித்திரர் ஓடிவந்து கலாநாதனது வாயைத் தன்கையால் புதைத்து, "இன்றம்மன்னன் இவ்வூர் வருவனெனும் வதந்தி நீ அறிந்திலேயோ! உன் வாள்திறம் அவனுக்கிணைமுன் ஏது செய்யும்! வாய்வந்ததைக் கூறி நின் தலையை இழக்காதே!" என, அவன் அவரது கையை வினயத்துடனகற்றி, "வாள்திறம் கிடக்க, நான் மனத்திட்பத்தால் கூறினேன். பொய்யுமில்லை. என் வாய்க்கு இந்தப் பேரெல்லாம் பூட்டாகுமா! செருக்கித் திரியும் இக்கொடியோனைத் தள்ளுங்கள்," எனத் தன்தோள்களைத் தட்டி நிமிர்ந்தனன். ஆனால் அவ்வூர்வாசிகள் இனி அங்கிருக்க அஞ்சியவராய் மெள்ள மெள்ளப் பெயரத் தலைப்பட்டனர். தான்செய்த இச்சிறு தந்திரத்தால் மேல் விசாரணை நடத்துவதொழித்துக் கூட்டம் கலைவதைக் கண்டு கருணாகரர் தன் மனத்துள் சிரித்தனர். ஆனால் தனமித்திரர் அவ்வாறு அகல்வோரைக் கூப்பிட்டு, "காக்கைக் கூட்டத்தில் கல்லிட்டதுபோல் ஏன் பறந்துவிடுகின்றீர். நாம் துவக்கிய கருமம் இன்னும் முடிவிற்கு வரவில்லையே! செய்யும்வகை துணியாது வறிதே போய்விடுவது மதிஈனம்......நில்லுங்கள், நில்லுங்கள்!" எனத் தெழித்தனர்.

கூனிக் குறுகி யடங்கி யொடுங்கி யிதுகாறும் இயம்பியோர் இயம்பிய வாய்பார்த்து வாளாவிருந்த தாமோதரனென்பான் ஒருவன் முன்வந்து, "ஐயன்மீர், எளியனேன் யான் உரைப்பதற்கொன்று விழைகின்றேன். ஏழை மருத்தவனே நான். ஆயினும், காஷ்மீரத்தில் பிறந்தவன். பாடலீபுரத்தில் மூலிகை முறை முற்றும் கற்றவன். தெளியா உள்ளமொடு நீவிர் சிந்திக்கின்றீர். நான் சொல்வதைக் கேட்டுச் சீர்தூக்கிப் பாருங்கள்..." என்று சொல்லிவருகையில் அச்சபையிலிருந்த வம்பனொருவன், "பாயிரம் போதுமையா வாய் விஷத்தைக் கக்கிவிடும்," எனத் தடுத்துரைத்ததையும் பொருட்படுத்தாது பின்னும், "எனது சகவாசிகளே, நமது நண்பர் கருணாகரர் சிறந்த கவுரவ முடையவர். இத்தருணம் நாம் எக்குற்றத்தைக் கடிவதற்கு ஆராய்கின்றோமோ அஃது அவர்மாட்டே யிழைக்கப்பட்டுள்ளது. ஆயின் முன்னின்று இப்பழிதீர்க்க அவரன்றோ உந்த வேண்டியவர். அவ்வாறின்றித் தாழத் தாழப்பேசி இத்துடன் விட்டுவிடுவது நலமென அவர் நயத்திலும் பயத்திலும் குறிப்புணர்த்தியதை நீங்கள் ஏற்கவில்லையே. தீங்கிழைத்தவன் தப்பவேண்டுமென்பது அவர் கருத்து. அதற்குக் காரணமும் இருக்கவேண்டும். அதை நேராகத்தான் சொல்லாமல் பின்னிடுகின்றார். ஏன்! செவ்வியஞ் சிறுமியர் சலனசித்த முடையாரம்பரிசு உலகறியாததோ. உத்தமப் பெண்ணொருத்தி.........கரவிலா நெஞ்சத்தளாய்.........பலகணிக்கதவை, இரவில் திறந்து வைத்திருக்கின்றாள். செம்மலொருவன்......அவனும் கரவிலனாய்......சங்கேதப்படி யவனறைக்கு வருகின்றான்......மற்றென்ன......இச் செயல்களைக் காரணகாரிய முறையில் தொடுத்துப் பாருங்கள். பிறகு இதற்காகப் பகைபாராட்டிப் போராடுதல் நம்நகரின் கடமையோ இயம்புவீர். விடுவதே கடன். கருணாகரர் நமக்குச் சாலவும் நன்றிகாட்டுவார்," எனச் சிறுத்த உடலைப் பின்னும் ஒடுக்கிப் பேசினான்.

வைத்தியன் தாமோதரன் இவ்விதம் போதித்ததைக் கேட்ட சிலர், "இச்சிறு உண்மையைச் சொல்லாமுன் உணர்ந்திலமே," என்றெண்ணுவர்போல் தோன்றினர். வேறுசிலர் அவன் கருத்தின்னதென்பது தெளியாது தம் மனம் போனவாறு பொருள்படுத்திக்கொண்டனர். ஆனால் அவன் கூறியது அங்கத மென்பதறிந்தவர் இருவரில் கருணாகரர் தலைகவிழ்ந்து கலுழ்ந்திருக்கக் கலாநாதனோ அருகிருந்தோரை அகற்றித்தள்ளி வைத்தியனின் எதிரிடைந்து, கனலெழ வொருதர மவனைக் கறுவிநோக்கி, "ஏ, நடைபிணமே, க்ஷயாபஸ்மார குஷ்டப்பிசாசே, தொழிலே விஷம் வைக்கும் பாதகா, உனதூத்தைவாய்க் காற்றால் நம்காந்திமதியின் கீர்த்தியா மங்கக்காண்பேன். இதோபார், உன்னைப் பிண்டம் பிடித்து உன் கல்லுவத்திலேயே வைத்துக் கந்தகத்தோடு சேர்த்தரைத்துச் சுடுகாட்டுச் சொறிநாய்க்கு இரையாக ஆக்கிவிடுகின்றேன் பார்," என்றனனாய்ப் பதறக் கருணாகரர் அவனைக் கையமர்த்தி, "எனதருமை மித்திரர்காள், பொறுப்பதே பெருமை என்றெடுத்து நான் ஓதியது இத்தகைய பழிபடும் சொற்களாய்ப் பொருள்தருமாயின் இக்கணமே நானு மிப்பகையைப் பாராட்ட உடன்பட்டு விட்டேன். எனினும் இதனது முடிவு நீர் கண்டதும் பொறுத்தே விட்டிடாததற்கு மனம் வருந்துபவராதலும் கூடும். மற்று, என்மகள் இவ்வவதூறிற்காளல்லள் என்பதேனும் வெளிப்படட்டும்......வாருங்களுடனே, அரசனடிதொழுது உற்றதை யுரைப்போம்," என விளம்பத் தனமித்திரர் தடுத்துக், "கருணாகரர், புதல்விக்குஉற்றதொரு மாசுதீரச்சொல்கின்றனரேயன்றி நும் நலம் கருதுவதாகக் காணவில்லை. இந்நிலையோ இக்கட்டுடையதா யிருக்கின்றது. ஆதலால் நம் பதித் தலைவர் சந்திரசேகரரிடம் சென்று உசாவுவோம். ஆய்ந்த அறிவால் அவர் ஆற்றுப்படுத்தும் வழி நடப்பதே உத்தமம். இப்படிச் செய்ய இசைவீரோ?" என்றனர். குழுமிய கூட்டமும் இம்முறைக் குடன்பட்டது. இடையே புகுதற்கு இது ஏற்றசமயம் எனக்கண்டான் தனஞ்சயன். "இதுவேதான் ஆதிமுதல் நான் அடுத்தடுத்துச் சொன்னது. நீங்களோ காதுகொடுக்கவில்லை. நகரத்தலைவர் சந்திரசேகரரிடம் போவோம் வாருங்கள்; அவர் பிரபுவாயினும் பெருந்தன்மை வாய்ந்தவர் என்று நானுந்தான் பலமுறை யழைத்தேன். இப்பொழுதேனும் தெரிந்ததோ என்னறிவினுணுக்கம்," எனப் பெருமையை நச்சி வாய்மையைத் துறந்தவனா யியம்பினான். சபையும் கலைந்தது. அதன் தீர்மானத்தை நிறைவேற்றத் தனமித்திரரும், கருணாகரர் கலாநாதன் தனஞ்சயன் மூவரை நிகழ்வெய்திய சம்பவங்களுக்குச் சாக்ஷியாக அழைத்துக்கொண்டு, நகரத்தலைவர் சந்திரசேகரர் வாழும் 'சிகரவிலாஸம்' எனும் மாளிகையை நோக்கி அவ்விடமிருந்தே புறப்பட்டார்.

சந்திரசேகர பிரபுவினிடம் அவ்வூரார்க்குச் சிறந்த நம்பிக்கையுண்டு. அக்காலம் காந்தாரநாட்டிற்கு அரசாயமர்ந்து, மன்னர் பலர் தனதாக்கினைக்குள்படச் செங்கோல் செலுத்திவந்தவன் விச்வகேசரி மகாராஜன். இவன் கருணையே உருவெடுத்ததெனத் தன் குடிகளைப் பாதுகாத்துவந்தான். கோணிய முகமேனும் வலிய சொல்லேனும் இம்மன்னவன்பால் கண்டவரிலர். தண்ணளியும் இன்னருளும் இவனது அரசமுறை யடங்கலும் தலைக்கொண்டிருந்ததால் கடிது ஒச்சுவதற்குக்கூட அவன் எக்காலும் மனம் கொண்டிலன். இத்தகைய இவனது அளவிறந்த அன்பு உலகமத்தனையும் அவன் வயப்படுத்தியதேனும் அந்நாட்டின்கண் ஆங்காங்குச் சிற்சிலர் இக்குணக்கடலது பொறுமையையோ, ஒறுத்தற்கேற்ற ஆற்றலின்றிக் கையற்ற தன்மை என மதித்து இராஜபயமின்றித் தீயன சில செய்வது மாயினர். அன்னவர் பெரும்பகுதி பிரபுவர்க்கத்தினரும் அரசபரிவாரத்தினரும் ஆண்மனைவாழ்ந்த அரச உறவினருமா யிருப்பதியல்பு. இவ்விஷயம் அரசன் அறியாததுமல்ல. மேற்சொன்ன மூவினத்தோரால் தனது கண்ணெனக் காக்கும் குடிகளுக்கு எக்குறையும் நேராவண்ணம் தடுப்பது கருதி விச்வகேசரி மன்னன் பல்வேறு முறைகள் தனதரசியலில் ஏற்படுத்தி வைத்திருந்தனன். குடியுரிமை யென்றொன்று பேரிட்டுக் கொடிகட்டிப் பறக்காமலே காந்தார நாட்டு வாசிகளுக்கு வாழ்க்கைக்கியன்ற அனைத்துரிமைகளையும் அவ்வரசன் அளித்தே யிருந்ததன் பயனாய் ஒவ்வொரு முக்கியபட்டினந்தன்னில் வசிக்கும் மாந்தர், தம்முள் கல்வியாலும் அறிவாலும் குணநலத்தாலும் சிறந்தோரைத் தேர்ந்தெடுத்து அவர்தம்மால் தமக்குறுவன தீங்கை விலக்கியும் ஆவனநன்மை ஆக்கியும் ஊறோம்பி யுடன்பட்டு வாழ்வதற்கு ஆங்காங்குத் தனித்தனி நகர சபைகள் நிர்மாணம் செய்யப்பெற்றிருந்தன. இச்சபையினோர் தமக்குத் தலைவனு மொருவன் ஆய்ந்தெடுப்பர். அரசனை யணுகித் தம் காரியம் முடிவுபெற வேண்டியதான சமயங்களி லெல்லாம் அத்தலைவனே முன்னின்று செய்வன செய்துவைப்பான். இரத்தினபுரி காந்தாரநாட்டுத் தலைநகர மல்லாவிடினும், அதிமடாதிபதி வசிக்குமிடமாகவும், வர்த்தகச் செழிப்பாலும், அமைப்பின் அழகாலும் கோயிலின் சிறப்பாலும் முக்கிய பட்டினமாயிருந்தது. அரசனது பரிஜன பிரபுக்கள் பலர் இப்புரியையே தமக்கு இருப்பிடமாக்கிக் கொண்டனர்.



ஆதலால் அப்பரிஜனத்தால் ஆனபயம் இவ்வூர்க்கு மற்றவூர்களைவிடச் சிறிததிகம். இரத்தினபுரி நகரசபை இதனால் பிரபுக்களுடன் பலகால் போராட்டம் கொள்ள நேர்ந்தது. இதற்காக அப்பதிவதிந்தோர் முள்ளினை முள்கொண்டே வாங்குவதாம் இரணவைத்திய தத்துவத்திற் கிணங்கப் பிரபுவின் இனத்தையே சேர்ந்த சந்திரசேகரப்பெருமானைத் தம் நகரத் தலைவராய்த் தேர்ந்தெடுத்துத் துன்பம் களைந்தனர். இவர் வாய்மையே தன்வாழ்நாட்கு வழிகாட்டும் விளக்காய் எந்நாளும் நந்தாமல் ஏந்திய உத்தமர். இனம் இனத்தோடென்னும் இழிதகைப் பழமொழி இப்பெரியவர்பால் பிழைத்தது. நகரத்தவர் தன்னிடம் வைத்த நன்னம்பிக்கையை நடுநிலை பிறழ்ந்து ஒருபோதும் பழுதுபடுத்தார். ஆதலாற்றான் இம்முறையும் தமக்கொரு வழிபெற அவ்வூர் வாசிகள் 'சிகரவிலாசம்" ஏகற்கு இருசொல்லின்றி இயைந்தனர்.

இப்பெருமகன் இனிதுவாழ்ந்த திருமனை இரத்தினபுரி எல்லையின் அரைக்காத தூரத்திற்கப்பால் திகழ்ந்தது. வழிநடந்த நால்வரும் உரைநலத்தால் உடற்களை கொண்டிலர். தனது தீரவீரச் செயல்களைப் புகழ்வதிலமைந்த தனஞ்சயன் வாய், வழிமுடிந்தும், மூடவில்லை. வாள்தொழில் பயிற்சி வழுவாது செய்து வருகிறானாம். ஒதிய மரத்தில் இராக்ஷஸ உருவம் ஒன்றுபண்ணி வீட்டில் வைத்திருக்கிறானாம்......அதைப் பார்த்தாலே பாஞ்சாலி பதறுவாளாம்......அதன் தலையைத் துண்டு துண்டாய்த் தன் வாள்கொண்டு வெட்டிக் கைதேர்ந்து விட்டானாம். இதைச் சொல்லக்கேட்ட யார் சிரிக்காதிருப்பார். கலாநாதன் வந்த சிரிப்பை யடக்கிக்கொண்டு, "என்னைத்தான் அந்த ஒதியக்கட்டை அரக்கன் என்று பாவித்து என்னுடன் சிறிது போர்செய்து நின்தேர்ச்சியினளவைப் பார்க்கின்றாயா!" என வினவினான். தனஞ்சயனோ, அவ்வாறுசெய்து பார்ப்பதில் தடையில்லை என்றும், ஆனால் கலாநாதன் தான் பழகிய இராக்கதனைப்போல் சற்றேனுமசையாமற் சமைந்திருப்பது அசாத்தியமென்றும், கண்ணேனுமவன் மருட்டி விழித்துவிடுவானானால் அனர்த்தம் வந்துவிடுமென்றும், தம்போன்ற ஒத்த வீரர் இருவர் விளையாட்டிற்குச் சண்டைசெய்வது மானமன்றென்றும், இன்னபல என்ன என்னவோ ஓயாது உரைப்பானாயினான். கருணாகரரும் தனமித்திரரும் தம்மில் உரையாடி நடந்தனர். நடந்தவர் சந்திரசேகரரது மாளிகை அடைந்ததும் அப்பிரபு அவர்களை வினயத்துடன் வரவேற்று அளவளாவி அன்புடன் உண்டி அருந்துவித்து வந்தகருமத்தை வினவி யாவது முணர்ந்தனர். உணர்ந்து மனம் வருந்தினர். பெரிதும் சினந்தனர். "யான்படைத்த பொருளெல்லாம் பொருந்தாது போயிடினும், என்னுயிரையே விற்றேனும், இரத்தினபுரிவாசிகாள், நுமக்குற்ற பிழையைப் பழிதீர்க்காது எளிவா இரேன்!......நல்லது......இதற்குச் சாக்ஷி யார்? கருணாகரரே, தனமித்திரர் உரைத்ததெல்லாம் உண்மைதானன்றோ!" என்று கூறினார்.

"குற்றத்தைப் பாராட்டப் பிரபோ, எனக்கு இஷ்டமில்லை. நேற்றிரவுக் கலகத்தில் அதை யிழைத்தோர்க்கன்றி யாருக்கென்ன நஷ்டம் விளைந்தது. பெரும்பதவி வாய்ந்தோனொருவனே அச்செயற்கு ஆஸ்பதமென்பது எனது துணிவு. என்பொருட்டு எம்மூர் பிரபுக்களுடன் பகை எடுத்துப் புகையச் சம்மதியேன். எனினும், இந்நோக்கம் கொண்டு பழிமறக்க வேண்டினனோ பாதகர் சிலர் விபரீதப்பொருள்படுத்தி என்னைத் தூற்றிவிடுகின்றனர். எனது பேதைப் புதல்வி காதலனுக்குக் கதவு திறந்ததாக ஏற்படுகின்றது. அது பொய். ஆகையால் நடந்ததை மாத்திரம் தெரிந்தவரையில் சொல்லிவிடுகின்றேன். பிறகு தேவரீர் கருத்தெதுவோ அதுவே செய்க!" என்று கருணாகரர் நடந்த நிகழ்ச்சிகளை எடுத்துக் கூறினார். அவர் சொல்லி வந்ததில் கைப்பட்ட வாலிபனை நழுவவிட்டதும், அவனை மீண்டும் கண்டால்கூடத் தனக்கு அடையாளம் தெரியாதென்று சாதித்ததும் சந்திரசேகரருக்கு ஏற்றுக்கொள்ளச் சாத்தியமல்லாதனவாயிருந்தன. இதன்பின்னர்க் கலாநாதன் தனக்குத் தெரிந்ததும் தான் செய்ததும் சொன்னான். தனஞ்சயனுக்குத தெரிந்தது சிறிது, அதனிலும் சிறிது அவன் செய்தது எனினும், மனந்தளராமல் தனக்குத் தெரியாதனவும் தான் செய்யாதனவும் மிகைபடப் பகன்று இதுவரையில் தன் பையுள்பொத்திவைத்திருந்த அவ்விறைத்த கையை எடுத்து விருதென ஆட்டினான். இக்கைக் குடையான் உயர்வகுப்புக் கொடியோனுதல் திண்ணமென அவரும் மதித்தார். பிறகு அதன் விரலொன்றிலிருந்த மோதிரத்தை உற்றுநோக்கி முத்திரையை ஆராய்ந்து ஆழ்ந்த சிந்தனையராய், "இன்றே ஏகுவோம் இரத்தினபுரிக்கு" என்றுரைத்த வளவில் ஆயத்தமாகிப் போந்த நால்வருடன் மனைநின்று வெளிவந்து துணையாய தருமமெனத் திருநகர் நோக்கிச் செல்லலுற்றார்.

T. N. சேஷாசலம்.

# மதிப்புரை.

[வ. வெ. சுப்ரமண்ய ஐயர் இயற்றிய **மங்கையர்க்கரசியின் காதல் முதலிய கதைகள்**:—'லோகோபகாரி' கார்யாலயம் சென்னை என்ற விலாசத்தில் அகப்படும். விலை அணா 12.]

அறிவும் ஒழுக்கமும் ஒருங்கே பெற்றவர் வெகுநாள் வாழப்படாதென்றொரு சாபம் உண்டோ இவ்வுலகிற்கு என்று நாம் எண்ணும் வண்ணம் உற்றாருமிப் பெருநாட்டாரும் அழவழப் பெண்ணொடுதானும் அருவிக்கிரையாய வ. வெ. சுப்ரமண்ய ஐயரை அறியாதார் யார். அன்னார் அருளிய இந்நூல் எமது பார்வைக்கு அனுப்பப்பெற்றோம். எட்டுச் சிறு கதைகளடங்கிய பக்கம் நூற்றைம்பதுகொண்ட இப்புத்தகம் அருமையும் பலபெருமையும் அமைந்ததென்பதற்கு ஐயமில்லை. ஐயரவர்களது வாழ்நாட்கள் போலிப் பகட்டுகள் அற்று இயற்கையோடியன்றதாய் எத்துணைத் திகழ்ந்தனவோ அத்துணை இயற்கை நயம் எங்கும் பயின்ற அவர் தமிழ்நடையைப் பெரிதும் பாராட்டுகின்றோம். வாழ்க்கையே போல் இருந்தது அவர் வாக்கும். உணர்வும் அவ்வாறே. அன்பால் தன்னையே உலகிலும் உலகினைத் தன்னிலும் கண்டவர்களுக் கல்லாது கற்பித்த கதையின் பாத்திரங்களின் உணர்விற்கு வயப்படுதல் இயலாது. மற்று உலகினின் சுகதுக்கமனைத்தும் தனதெனப் பாவித்த இவரனைய மனமகன்ற மாந்தருக்கே கதை நிகழ்த்தும் பாத்திரங்களுக்குப் பேரும் உருவும் செயலுமன்றி உயிரும் உணர்வும் உடனளிப்பது இயல்வதாகும்.

**லைலிமஜனூன்** என்னும் கதையும் **அனார்கலி** என்னும் இவ்விரு கதைகளும் துக்கமாய் முடிகின்றனவெனினும், காதலால் பிணிப்புண்ட இருவர்தம் உள்ளத்தின் மெய்த்திறத்தைக் காட்டுகின்ற வகையில் நமது மனதில் துன்பத்தோடு ஒரு இன்பமும் கலந்தெழும்படி செய்கின்றன. தீது வாழ்தலின் நன்கிறத்தலே நலம். மற்றக்கதைகளைப் படித்தபிறகு முதல் மூன்றுகதைகளாகிய **மங்கையர்க்கரசியின் காதல், கமல விஜயம், காங்கேயன்** என்பன அத்துணை சிறப்புவாய்ந்தனவாக எமக்குத் தோன்றவில்லை. நடையினழகு நன்றாயிருக்கின்றதேனும் முன்குறித்த இரண்டு கதைகளைப்போல் நம் உள்ளுணர்வைப்பற்றிப் பாத்திரங்களின் கதியோடு இணைத்துவைக்கும் தன்மை ஒரு சிறிது இம்மூன்றிலும் தாழ்ந்திருக்கின்றது. ஆதலால் இனிவரும் பதிப்பிலேனும் இம்மூன்று கதைகளையும் முன்னதாய் வைக்காமல் பின் பகுதியில் சேர்ப்பது தகும். எடுத்தவுடன் மனதைக் கவரவல்ல மற்றக்கதைகள் முதலிலிருந்தால் புத்தகத்தைத் தொடர்ந்து யாவரும் படிப்பவராவர் என்னும் எண்ணத்தால் இது கூறினோம்.

இந்நூலின்கண் நடுநாயகமாக விளங்குவது **குளத்தங்கரை அரசமரம்**. இதற்கிணையாய சிறுகதை யொன்று அமைப்பின் திறத்திலும் கருத்தின்ஆழத்திலும் மொழி

யின் அழகிலும், தமிழிலேனும் பிறபாஷைகளிலேனும் வேறு பல காண்பதரிது. அசையும் உயிரோடு மாத்திரம் அல்லாது அசையாத மரத்தின் உணர்வோடும் ஐயரின் பெருமனம் ஐக்கியப்பட்டிருந்த தென்பதற்கு இக்கதையன்றி வேறொரு சான்று வேண்டா. ஐயரே அரசாக நின்று பேசுகின்ற பெருமையைக் கருதுந்தோறும் உருகாத கன்மனம் படைத்தபேர் இங்கில்லை. மலையிலும் குகையிலும் எதிரொலி கேட்கவந்த வரலாற்றைக் கிரேக்கர் கூறியுள்ளார். அதைத்தழுவி ஐயர் அமைத்திருக்கின்ற **எதிரொலியாள்** என்னும் கதை மற்றெதற்கும் அழகினில் பின்பட்டிருக்கக் காண்கிலம்.

**அழேன்** ழக்கே என்பது அப்பேர்கொண்ட ஒரு பிரஞ்சுகாரன் சென்ற யுத்தத்தில் சிறை செய்யப்பட்ட தன் நாட்டுப் போர்வீரரைக் காப்பாற்ற முயன்று அதற்குச் சிக்ஷையாக ஜர்மனியர் சுட்டுவிட உயிர் துறந்த ஒரு உண்மைச் சரித்திரம். ழக்கே என்னுமிவன் தேசாபிமானத்தால் தன் மனை நலமும் மக்களின் நலமும் வாழ்க்கைநலமும் யாவும் தன்னோடு தியாகம்செய்ததைப் படிக்க மிகவும் உருக்கமாயிருக்கின்றது. ஆனால் ஒன்று. ஐயரவர்கள் இத்தகைய தேசாபிமானத்தைக் கொண்டாடுவது இந்நாள் பொதுவாகத் தேசாபிமானம் என்னும் கருத்திற்கும் அதன் பேரால் செய்கின்ற செய்கைகளுக்கும் இணங்கி யிருக்கின்றது எனினும் இவ்வகைத் தேசாபிமானத்தை எம்மால் ஏற்றுக்கொள்ள இயலவில்லை. ஏனெனில், தேசாபிமானம் என்னும் ஒரு குறுகிய எண்ணத்தால் மானுடாபிமானத்தை மறந்து விடுகின்றவர்க ளாகின்றோம். தேசாபிமானம் என்பதற்குச் சுயநய எண்ணம் இன்மை என்னும் எதிர்மறைப் பொருளேனும், லோகாபிமானம் என்னும் விரிந்த பொருளேனும் இருக்குமாயின் அது கொண்டாடத் தக்கதே. ஆனால், நான்கெல்லைகட்டி ஒரு நாட்டை உலகத்திலிருந்து பிரித்து "அந்த எல்லைக்குள் அடங்கிய மண்ணின்மீது எனக்கு அபிமானம் உளது; அதன் பொருட்டு என்னுயிரை இதோ அர்ப்பணம் செய்கின்றேன்" என்றொருவன் முன்வரும்போது அன்னது நோக்கத்தின் பெருந்தன்மை செய்கைக்குப் பயனில்லை என்பதை மறைத்து விடுகின்றது. ஐயரவர்கள் இக்கதையில் பாராட்டிய தேசாபிமானம் இத்தகையது என்று நினைக்கின்றோம். ஜர்மனியர், பிரான்ஸைச்சேர்ந்த லீல் கோட்டையைக் கைப்பற்றி அந்த நகரைத் தமது ஆட்சியில் அடக்கிக்கொண்ட நிலையை அவர் வர்ணிக்கின்ற இரண்டொரு வாக்கியங்களைப் பார்த்தால் இது விளங்கும்:—

"இந்த நிலைமையில் பிரான்ஸ் ஜனங்கள் மனதில் உண்டான கிளர்ச்சியை எவ்வாறு வர்ணிக்கலாகும்? தாயினும் இனியதான ஜன்ம பூமியில் அன்னியன் புகுந்து அட்டகாசம் செய்துகொண்டிருக்கையில், எந்த ஆண்பிள்ளையின் மனம் துடிக்காதிருக்கும்?....................

"தேசபக்தியுள்ள பிரஞ்சுக்காரர்களுக்கு இந்தக் காட்சியைக் காணச் சகிக்கவில்லை. அன்னியன் (தம்) நகரத்தில் கொட்டம் அடிக்கிறது, அவனை அடக்க முயன்ற தேசவீரர்கள் கைதிகள்போல் அடைபட்டிருப்பது! மீசை வைத்துக்கொண்டிருக்கிற எந்த ஆண்மகனுக்கு இது பொறுக்கும்?

"தெருவில் திரியும் நாயானது அடிமை நாட்டின் மனிதனைவிட எண்ணிறந்த மடங்கு மேலல்லவா? பிறகு என்றென்றைக்கும் நம் நாட்டான் கைகீழ், அன்னியன் கைதான் மேல் என்றாகி விடாதா ... இப்படியாவதைத் தடுக்க நம்மாலான அளவுக்கு முயலாமல் அப்படி ஒரு பிழைப்பா..."

யார் அன்னியன்? பத்துமைலிற் கப்பாலா, நூறு மைலுக்கு அப்பாலா! எது எல்லை? அன்னிய பாவத்திற்கு மன எல்லை அல்லாது மைல் எல்லை இல்லையே! ஈசுவர சிருஷ்டியில் அன்னியரும் இருக்கின்றார் என்னும் எண்ணம் ஏற்பட்டால், முதலிலே அது தூரத்தைக் கருதிப் பிறந்ததானாலும், வரவர நெருங்கி விடுமே. நாட்டி னெல்லைக்குள்ளும் சாதியாலும் மதத்தாலும் பாஷையாலும் அன்னியர் தோன்றத் தலைப்படுகின்றனர். அப்புறம் அண்டைவீட்டுக்காரனும், அண்ணனும் தம்பியும் அன்னியரே! துஷ்டரையும் தூர்த்தரையும்கூட கிறிஸ்தவ மதமாகட்டும் மற்றெந்த மதமாகட்டும் அன்னியராகப் பாவிக்க கற்பிக்கவில்லையே. இறைவன் மக்கள் உலகிற்பிறந்தோர் யாவரும் எனின் பிறந்தநாடு வேறாயினும் அன்னியராகி விடுவாரோ. மானுடாபிமானத்தின் வளர்ச்சிக்கு இடையூறாயிருக்கும் இத்தேசாபிமானத்தின் பேரினால், மதாபிமானத்தைப்போலவே, பல தீங்குகள் நிகழ்கின்றன.

உலகம் உய்யவேண்டுமென்று உயிரையே துறக்கும் வீரர் போற்றத் தகுந்தவர்கள். இதற்குமாறாக அந்த நாட்டிலேஇருந்து வந்தவன் இந்த நாட்டிலே தரிக்காமல் போவதற்கு என் உயிரையும் தியாகமாக்குவேன், என்ற பொழுதே மண்ணிலே ஒரு கோடுகிழித்து அக்கோட்டிற்குள் அபிமானத்தை அடக்கிவைப்பது எமக்கு அர்த்தமாகவில்லை. ஐயரவர்கள், பிராணத்தியாகம் செய்வதற்கு ஏசுகிறிஸ்துநாதரை உதாரணமாய்க் காட்டுகின்றார். அப்பெருஞ்செயல் உலகிற்கோ அல்லது எந்த ஒரு நாட்டிற்கோ! ஆதலால் தேசாபிமானமென்று பிரித்துப் பாராட்டுகின்ற காலத்திலும் ஐயரவர்கள் மனதில் மானுடாபிமானமே தங்கிபிருந்த தென்பதற்கு ஐயமில்லை. அவ்வளவு விசாலமான புத்தி குறுகிக் கருதாது. வாய்தான் வழக்கமாய்ச் சொல்வதைச் சொல்லிவிட்டது. ரோமாபுரியின் **தவிந்தக் தூர்ஸியனை** அவர் தியாகத்தின் சிரேஷ்டத்திற்கு உதாரணமாய்க் காட்டினார். அவனும் மனிதரைக் காக்கவேண்டுமென்று தன்னுயிரை அளித்தானே யன்றி அன்னியனைத் தடுப்பதற்கன்று. மெய் அன்பிற்கு அளவில்லை யாதலால் தேசாபிமானத்திற்கு, இப்பொழுது அது உபயோகப்படும் பொருளிலே, மெய் வாழ்க்கையில் இடமில்லை.

இவ்வரிய புத்தகத்தை யாவரும் வாசிக்கவேண்டுமென்பது எமது கோரிக்கை. நடையும் எளியதாதலால் சிறுவர் சிறுமியர்களும் இதைப் படிக்கப் பெரிதும் பயனடைவர். இதனால், சிறுவர்க்கே இப்புத்தகம் உரியதென்று நாம் சொல்லவரவில்லை. பயனோடு அதனழகையும் முழுவதும் அனுபவிக்கக்கூடியவர் பெரியவர்களே யாவர்.

---

[S. ரங்கம்மாள் :—1. காந்தி சரித்திரக் கும்மி........ விலை. 4 அணா.

2. பாரததேசிய கீர்த்தனை. விலை. 6 அணா.

சென்னைப் புரசைபாக்கம், டாணாத்தெரு, 64. நம்பர் வீட்டில், கிடைக்கும்]

இவ்விருபுத்தகங்களில் முன்னது மகாத்மாகாந்தியின் சரித்திரத்தை ஆதாரமகக்கொண்டு மெட்டுகள் அமைத்துப்பாடிய ஒரு கும்மி. பின்னதில், லஜபதிராய் திலகர். எஸ். ஸ்ரீநிவாசஐயங்கார் அனையபல பெருமக்களைப் பற்றியும், திருப்பதிகள் பலவற்றுள் எழுந்தருளிய பெருமாளின் புகழையும் பாடிய பாடல்கள் அமைந்திருக்கின்றன. இபபாடல்கள் படிப்பதற்கு ஏற்றவை என்பதில் சந்தேகமில்லை. சிறுமியர்களுக்கு இப்பாடல்களைப் போதித்து வைப்பது நலம். இலக்கணப்பிழைகள் ஒன்றிரண்டு இருப்பதால் இப்புத்தகத்தை யாரும் அவமதியார். உள்ளத்திலே பக்தி பெருகுகின்றவர் தோன்றியதைத் தோன்றியவாறே பாடித்தர விரைவாரேயல்லாது இனி இலக்கணமும் காரிகையும் கற்றபின்பே பாடவேணடுமென்று காழ்ந்திருப்பது இயற்கையன்று. யாவரும் இவ்விரு பாடல்நூல்களை அன்போடு ஏற்று ஆதரிக்க விரும்புகின்றோம்.



# மலர் வனம்.

## வாழி தோழி.

காதலின் மிகுதியாற் சிலகால் ஏதிலர்போ லிருக்க நேர்கின்றது. களவினில் தன் னரும்பெறற் றலைவியை உளமுவக்கக் கலந்துவாழ்வான் செம்மல், அன்றன்று தனதின்னுயிரை நிறுத்திவிட்டு உடலே அகல்வதெனப் பிரிகின்ற வேளைதோறும், இருவருயிரும் மாறிமாறி இதயம் புக்கு எய்தியுளதாதலால் அந்நிலையே தானுமுற்றவச் செவ்வியஞ்சிறுமி, இழையொன்று இடையூடாடித் தம்மைப் பிரிக்கலாற்றாளாய்ப் பொன்வரையாடிய மின்னுக்கொடிபோல் அவனிரு தோள்களுந்தழுவி, 'அன்ப, என்னை நீ மணக்குநாள் எந்நாள்' எனத் தனகருங் கண்களால் நனி இரப்ப அண்ணலும், உளம்நெகிழ்ந் தொருபாற் படாதுலவும் அவளெண்ணமேபோல் கன்னமும் கழுத்துந் தழுவிப்புரளும் கதுப்பினைத் திருத்தித் தோளினைத் தைவந்து, "கரும்புக்கடல் வந்த காரிகை, அயரேல், நாளையே நுந்தைபாற் கூறி நின்மணம் ஊரறிய வேண்டுவல்' என உரைத்த சூளுக்குத் தெய்வக்கரி காட்டிக்காட்டி விடுத்தேகுபவனாவான். ஆயின் என்! கடிமணமும் பணக்கடன்போல் நாளையெனப் பகர்ந்த நாள் எய்துவதின்றியே கழிந்தகல்வ தாகின்றது. ஏனெனில், முன்பெற்ற செல்வம் பெரிதேனும் அதுகொண்டு மணம் முடித்தல் மரபன்று. ஆதலால், இதற்கென்று இவன் வேற்றூர்நாடிப் புதுப்பொருள் ஈட்டிவரல் வேண்டும். பொருள்கருதி இவன் இன்னவாறு சிலகாலம் பிரியவேண்டியது இன்றியமையாதென உணர்ந்தானாலும் பிரிந்தநாள் அவள்நலம் பெறுவதின்றே யென்றஞ்சி, அன்றன்று நாளைநாளை யெனத்தன் நெஞ்சொடு செப்பி வரைவு தாழ்க்கின்றான். இந்நிலையோ தலைமகட்குப் பெரிதும் கவற்சி தருகின்றது. தன் காதலும் கற்பும் வஞ்சனையால் கவர்ந்த வொரு கள்வனாகி, முறைப்படி யொருநாளும் வரைந்திடாமற் கழிந்தே அகல்வன் கொல்லோ' என இப்பேதைப் பெண் தெருமரல் எய்துவதும் இயல்பே. 'அளியளை நீ மணமேற்றுக் கொள்' என வாய்விட்டுக் கேட்பதோ பெண்மைக்குந் தன் பெருமைக்கு மழகன்று. இவளும் கேட்கிலள், பிரிதற்கஞ்சியே தவிக்கின்றேனென அவனும் உரைத்திலன். இன்னவாறு வரைவு நாட்கள் கடந்து நீடிக்க நீடிக்க வளர்கின்ற காதலோடு அவ்வளிதைக்குக் கவற்சியும் கலந்துழக்க மெய்கரைந் தாவி சோர்கின்றவளாகின்றாள்.

இந்நிலை எய்திய தலைமகளொருத்தி தன்னருந் தோழியோடுரையாடித் தன் விதியினையும் பொய்த்த அவன் மொழியினையும் நோவாளாய் உற்றகுறை கூறக், காதலால் கலங்கா உள்ளத்தளாய அப்பாங்கி வரைவு நீடிய காரணத்தின் நடுநிலையோர்ந்து தேற்ற முயல்கின்ற அழகினை நல்லந்துவனார் பாடிய கலிப்பா வொன்றனுள் எம்மொடு கலந்துண்ண நண்பர்காள், வம்மின்.

தலைமகள் வைகிய தண்ணறுஞ் சாரற்கு அண்மியதே அண்ணலார் ஆண்ட மலை. தலைவியும் அவளுயிர்த் தோழியுமாய் ஒருபகல் தம்மனையகன்று வெளிப்புறம் போந்து மூங்கிலின் நெல்லைப் பாறைமேலிட்டு, யானைத் தந்த உலக்கைபிடித்துத் தலைமகன் தன்மையை இருவரும் மாறிமாறிப் பாடினராய்க் குற்றுகின்றனர். அந்தக் காலைத் தன்னை மணம்புரியத் தாழ்கின்ற அந்நாயகன் வாழ் குன்றினை எதிர்கருதினள் நோக்கித் தலைவி,

> இலங்கு மருவித் திலங்கு மருவித்தே
> வானி னிலங்கு மருவித்தே தானுற்ற
> சூள்பேணான் பொய்த்தான் மலை.

[தான் உரைத்த வார்த்தையைப் பாதுகாவானாய்ப் பொய்த்தவனுடைய மலையாக அது இருந்தும், விளங்குகின்ற அருவியும் அதன்பால் இருக்கின்றதே! விளங்குகின்ற அருவியும் அதன்பா லிருக்கின்றதே! மழை பெய்யவீழருவி உடைத்தே அம்மலை!] என, மங்கைக்குறைத்தமாற்றம்மாறினர் வரைமாட்டும் மழையொன்றுபெய்த தென்ன விந்தையென்று அவன் இயற்பழித்துப் பாடினள். பாடக்கேட்டதோழி, அவன் பொய்த்திலன், பெருந் தகையாளன்மாட்டுப் பொய்மையும் தோன்றுமோ வெனத் தேற்றுவாளாகி எதிர்பாடுவாள்:—

> பொய்த்தற் குரியனோ பொய்த்தற் குரியனோ
> வஞ்சலோம் பென்றாரைப் பொய்த்தற் குரியனோ
> குன்றக னன்னுடன் வாய்மையிற் பொய்தோன்
> றிங்களுட் டீதோன்றி யற்று. [றிற்

[பொய் சொல்லுதற்கு உரியவனோ அவன்! பொய் சொல்லுதற்கு உரியனோ! அல்லன். அஞ்சல் நீயென மாதருக்கு வாக்குத் தந்தவன் அவர்பால் பொய் இழைக்கத் தகுந்தவனோ! குன்றகன்ற நல்நாட்டுடைய அவனது மெய்யினில் பொய் கலந்து தோன்றுமாயின், சந்திரனுக்குள்ளே நெருப்புத் தோன்றியது போலன்றோ] 'ஆதலால் இவ்விபரீதம் நிகழுமெனத் தலைவி நீ அயரேல்' எனத் தோழி தேற்றியும் ஆற்றாது,

> இளமழை யாடு மிளமழை யாடு
> மிளமழை வைகலு மாடுமென் முன்கை
> வளைநெகிழ வாராதோன் குன்று.

[என் முன்கையின் வளைகழலும்படி என்னிடத்து எய்தாதவன் வாழ்கின்ற மலையாயிருந்தும் இளமேகம் அதன்மேல் உலவுகின்றதே! இளமுகில் அதன்மே லுலவுகின்றதே! எந்நாளு முலவுகின்றதே] எனப் பின்னும் அவன்பொய்யைத் தலைவிபழிக்கத் தோழியோ மீண்டும்,

> வாரா தமைவானோ வாரா தமைவானோ
> வாரா தமைகுவா னல்லன் மலைநாட
> னீரத்து ளின்னவை தோன்றி னிழற்கயத்து
> ணீருட் குவளைவெந் தற்று.

[நின்பால் வாராமலிருந்து விடுவானோ! வாராமலிருந்து விடுவானோ! அப்படி இருந்துவிடும் தன்மையனல்லன். அந்த மலைவாழ்கின்றவனது கருணைக்குள் இத்தகைய கொடுமை தோன்றினால், அது நிழலமைந்த குளத்திற் பிறந்த குவளை அதனுள்ளே வெந்துபோவது போலுமாகும்.]

என எடுத்துக்காட்டினாளேனும் தனதுயிர் கவர்ந்தகன்ற தலைவன் வைகுமச் சாரலைவிட்டுக் கண்களைப் பெயர்க்க இயலாளாகித் தலைமகள்,

> மணிபோலத் தோன்று மணிபோலத் தோன்று
> மண்ணா மணிபோலத் தோன்றுமென் மேனியைத்
> துன்னான் றுறந்தான் மலை.

[என் மேனியைச் சோராது துறந்தவன் வாழ்கின்ற மலையாயினும் அது, மாகதம்போல் விளங்குகின்றதே! மாகதம்போல் விளங்குகின்றதே சாணையில் தீட்டாத மாகதம்போல் தேன்றுமிவ் விபரீதம் என்னவோ!]

என நெடிது நினைந்திரங்கி நெட்டுயிர்ப்பு வீங்குவாட்குத் தோழி மிகுந்த பரிவினோடு பின்னும் பகர்ந்தனள்.

> துறக்குவ னல்லன் றுறக்குவ னல்லன்
> றொடர்வரை வெற்பன் றுறக்குவ னல்லன்
> றொடர்பு ளினையவை தோன்றின் விசும்பிற்
> சுடரு ளிருடோன்றி யற்று.

[நின்னையவன் ஒரு போதும் கைவிட மாட்டான், கைவிட மாட்டான். தொடர்ந்த சிறு குன்றுகளையுடைய மலையில் வாழுமவன் கைவிட மாட்டான். அவன் கொண்ட நட்பினிற்குள்ளே இதுபோன்று கொடுமை தோன்றுமெனின், ஆகாயத்தில் திரியும் சூரியனுக்கு உள்ளேயே இருள் தோன்றுவதற்கு நிகராகும்] 'ஆதலால் இவ்வித அபவாதம் அவன்மாட்டு இயம்புவது ஒழிவாய்' என்று ஆற்றுபவளாயினள்.

இன்னவாறு இவர் பாடிய பொருளை மறைந் தயலேநின்ற தலைமகன் கேட்க நேர்ந்தது. நேராக அவன் தன் காதலியின் மனையகம் ஏகி அவள் தந்தைபால் மணம் வேண்டினன் என்பதும் பின்னர்த் தெரிகின்றது.

'மதுகரம்'

# வர்த்தமானம்.

**சைமன் கமிஷன்:**—சைமன் கமிஷன் சென்னைக்கு வருவது இன்னநாளென்று இன்னும் நிச்சயமாகவில்லை. சென்னைக்கு வருவது சந்தேகமா யிருக்கிறது என்றும் சொல்லுகிறார்கள். வருவதாயிருந்தால் 25-ந் தேதி யளவில் ஒருவேளைவரலாம்.

***

**கமிஷன் அறிக்கை:**—ஸர் ஜான் சைமன் ராஜப் பிரதிநிதிக்கு எழுதிய கடிதத்தில் இந்தியர்களுக்கு ஒரு வகையான உரிமையும் கமிஷனில் கொடுக்கவில்லை என்றும் ஆகையால் கமிஷனோடு சேராதுவிடுவதே உத்தமம் என்று எல்லாக் கட்சியினரும் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள்.

***

**மாதர் மஹா நாடு:**—அகில இந்திய ஸ்திரீகள் மகா நாட்டுப் பிரதிநிதிகள் ராஜியத் தலைவர்களைச் சந்தித்து 16 வயதுக்கு முன் பெண்களுக்குக் கலியாணம் செய்வதைத் தடுக்கவும், சம்மத வயதை 16 ஆக உயர்த்தவும் கொண்டுவரப்பட்டுள்ள மசோதாவை ஆதரிக்கும்படி கேட்டுக் கொண்டனர்.

***

**இந்தியச் சட்டசபைக் கூட்டம்:**—இந்தமாதம் 16-ந் தேதி இந்தியச் சட்டசபையில் சைமன் கமிஷன் பகிஷ்காரத்தைப்பற்றி, விவாதம் நடக்கும். அதற்காகச் சட்ட சபைக்கு இதுவரையில் வாராமலிருக்கிற அங்கத்தினர்கள் எல்லோரையும் வரும்படி அழைத்திருக்கிறார்கள். அவ்விதம் எல்லோரும் வந்தால் பகிஷ்காரக் கட்சியார் வெற்றியடையலாமாம்.

***

**சட்ட சபையில் விவாக வயது மசோதா:**—விவாக வயது மசோதாவைப்பற்றி வைதிக ஹிந்துக்கள் இந்த விஷயத்தில் கவர்ன்மெண்டார் அரசாங்க அங்கத்தினர் எவருக்கும் தலையிட அனுமதி கொடுக்கக்கூடாதென்றும், இந்தவிஷயத்தில் கிளர்ச்சிசெய்யும் ஹிந்துக்கள் தம்மதத்தினர்எல்லாருடைய உணர்ச்சியை வெளியிடவில்லை என்றும், ஆகையால் கவர்மெண்டார் தங்கள் கடமையையும் பொறுப்பையும் உணர்ந்து நடப்பார்களென்றும் ராஜப் பிரதிநிதிக்கு ஒரு மகஜர் அனுப்பியிருக்கிறார்கள்.

***

**இந்திய ரிசர்வ் பாங்கி மசோதா:**—ரிசர்வ் பாங்கி பில்லை கவர்ன்மெண்டார் நிறுத்தி விட்டார்கள். சட்ட சபைக்கு ஒரு வகையான பொறுப்பும் இந்தப் பாங்கில் இருக்கப்படாதென்று கவர்ன்மெண்டு கொண்டிருந்த எண்ணம் நிறைவேறாமற் போனதே இதற்குக் காரணம். இந்த விஷயத்தைப்பற்றி இனிமேல் சர் பேசில் பிளாக் கட்டுக்குப்பின் புதிதாக வேறு பில் கொணடுவர விருக்கிறார்களோ வென்பதைப்பற்றி இப்போது ஒன்றும்தெரியவில்லை.

***

**ஸர்வகட்சி மஹாநாடு:**—ஸ்வராஜ்யத்திட்டம் ஒன்றை அமைக்க வேண்டுமென்று டில்லியில் சர்வ கட்சிகளிலுமுள்ள தலைவர்கள் ஒரு கூட்டம் கூடினார்கள். அதற்கு 160 பேர் பிரதிநிதிகளாகச் சேர்ந்திருந்தார்கள். இதில் ஸ்வராஜ்யஆட்சி முறையை நிர்ணயித்து ஒருநல்ல தயார் செய்வதற்குக் கமிட்டி ஒன்று நியமிக்கப்பட்டிருக்கிறது. வேறு சில விஷயங்களையும் இந்தக் கூட்டத்தில் பேசி முடிவு செய்வதற்காகக் கூட்டம் தள்ளிவைக்கப் பட்டிருக்கிறது.

***

**சென்னைப் புத்தகச்சாலைச் சங்கம்:**—நாடெங்கும் கல்வியுணர்ச்சி பரவுதல் வேண்டுமெனும் நோக்கத்தோடு சென்னையிற் சிலர்கூடி சங்கமொன்று ஏற்படுத்தி வருகின்றனர். ஊரூராய்க் கிராமம் கிராமமாய்ப் பொதுப் புத்தகச்சாலைகள் அமர்த்தி அதை நடத்துதற்குத் தக்க கல்விமான்களை நியமித்துச் சிறுவருக்கும் பெரியோர்க்கும் இயன்ற புத்தகங்களைச் சேகரித்துப் படிப்பதில் அனைவர்க்கும் ஆசை உண்டாக்குவது இச்சங்கத்தின் முயற்சியாம். இன்னதற்கு யாவரும் உதவிசெய்ய வேண்டுமென அச்சங்கத்தினர் கோருகின்றனர். ஸ்ரீமான் K. V. கிருஷ்ணஸ்வாமி ஐயரவர்கள் தலைவராயும், ஸ்ரீமான் S. R. ரங்காநாதன், காரியதரிசிகளுள் ஒருவராயும் அமைந்துளர்.

**சர். ஜகதீச சந்திரபோஸர்:**—சென்னைச் சர்வகலா சாலையார் 'ஹிந்துவைத்திய முறை' என்னும் விஷயத்தைப்பற்றிச் சிறந்த வியாசம் எழுதுபவருக்குப் 'போஸ் பரிசு' என்று 350 ரூபா வெகுமதி கொடுப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். இந்தியாவிலுள்ள எந்த மாகாணத்தைச் சேர்ந்தவர்களும் இதில் சேரலாம். ஆகஸ்ட் மாதம் முதல்தேதிக்கு முன் வியாசங்கள் சர்வகலாசாலை ரிஜிஸ்டாரிடம் வந்து சேரவேண்டும். வியாசங்கள் அனுப்புகிறவர்கள் தங்கள் பெயரையும் விலாசத்தையும் தனிக் கவரில் அனுப்புவதோடு வியாசத்துக்கு மறு பெயரும் குறித்திருக்கவேண்டும். இதற்குமுன் வேறு இடங்களில் பிரசுரிக்கப்பட்ட வியாசங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

***

**காங்கிரஸ் கமிட்டிக் கூட்டம்:**—முதன் முதலாகப் புது டில்லியில் காங்கிரஸ் நிர்வாகக் கமிட்டியின் கூட்டம் 10-ந் தேதி யன்று கூடியபொழுது இந்தியச் சட்டசபையில் ரிசர்வ் பாங்கு மசோதாவை எதிர்க்கவேண்டி ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸ ஐயங்கார் காங்கிரஸ் கட்சியினரைச் சட்டசபைக்கு அழைத்துச் சென்றதைக் கமிட்டியார் ஆதரித்தனர். பிறகு காங்கிரஸ் கட்சியினர் சென்னைச் சட்டசபையில் மலையாளக் குடிவார மசோதா யோசனைக்கு வருகையில் அதை எதிர்க்கவோ, ஜனநலத்திற்கான வழியில் திருத்தி அமைக்கவோ சட்டசபை செல்லலாம் என்றும், பிறவிடங்களிலும் ஜனங்களின் நலத்திற்கு விரோதமான மசோதாக்கள் வருங்காலையில் சட்டசபை சென்று அரசாங்க மசோதாக்களைத் தோற்கடிக்கலாம் என்றும் முடிவுசெய்தனர்.

***

**புறநானூற் றாராய்ச்சி:**—பச்சையப்பன் கலாசாலை மாணவர் தமிழ்ச் சங்கம் மிக்க ஊக்கத்தோடு தமிழை ஆதரித்து வருகின்றது. சென்ற வாரம், திருவாளர் ச. தா. சற்குணர் அதன் சார்பாகப் புற நானூற்றைப் பற்றி அரியதொரு சொற்பொழிவு நிகழ்த்தினார். பண்டைநாள் தமிழுலகில், அரசர்தம் மாண்பும், புலவர்தம் பெருமையும், வீரமாதரின் தீரச்செயல்களும் அவர்தம் கற்பும், மக்கள் மனத்தமைந்த நிலையும் நீதியும் இருந்தவாறு யாதென இவ்வறிஞர் அந் நூலின் உதவிகொண்டு, இடை இடையே ஏற்ற செய்யுள்களைக் காட்டி விளக்கமுறச் செப்பினார். மகா, மகோபாத்தியாய பிரம்மஸ்ரீ. உ. வே. சாமிநாத ஐயரவர்கள் இச்சபைக்குத் தலைமைவகித்துக் கூறிய தன்ஆராய்ச்சியின் துணிபுகளை எடுத்துக்காட்டத் திருவாளர் M. கந்தசாமி முதலியாரவர்கள் கூறிய வந்தனோபசாரங்களுடன் அவை கலைந்தது.

***

**இந்திய வியாபார முன்னேற்றம்:**—புறநாடுகளில் வியாபாரப் பிரதிநிதிகளை ஏற்படுத்தி இந்திய வியாபாரத்தை முன்னேற்றத்துக்குக் கொண்டுவர வேண்டுமென்று இந்திய ராஜாங்க சபையில் ஸர் பிரோஸ் ஸேத்னு ஒரு பிரேரணை கொண்டுவந்து அது சபையாரால் ஏற்கப்பட்டது. அவர் சொன்னதாவது எல்லா தேசங்களுக்கும் வியாபாரமே செல்வத்தைக் கொடுக்கிறது. வியாபாரம் அதிகரித்தால் ராசாங்கத்தாருக்கு அதிக வரும்படி உண்டாகும். ஜனங்களின் சராசரி வரும்படியும் கூடிவரும். இந்திய வியாபாரம் வளரா திருப்பதற்கு அரசாங்கமே ஜவாப்தாரி. வெளிநாடுகளில் இந்தியப் பிரதிநிதிகள் இருந்தாலன்றி இத்தேச வியாபாரம் முன்னேற்றத்திற்கு வராமல் குறைந்து போய்விடும் என்று சொன்னார். இந்தவேலை பார்க்கிறவர்கள் இந்தியராகவே யிருக்கவேண்டுமென்றும் அதற்குத் தகுந்தவர்கள் அநேகர் தேசத்தில் இருக்கிறார்கள் என்று சொன்னதற்குக், கவர்மெண்டு பிரதிநிதி இந்தியர்கள்தான் இந்தப் பதவியை வகிக்க வேண்டும், ஆனால் அதற்கு ஏற்ற யோக்கியதை உள்ளவர்கள் இப்போது அகப்படுவது கஷ்டம் என்றாலும், சிவில் சர்விசிலுள்ள இந்தியர்களை இதற்குப் பழக்கலாமென்றும் சொல்லி இந்தத் தீர்மானத்தை ஒப்புக்கொண்டார். தீர்மானம் ஏகமனதாய் நிறைவேறியது.




(6) ஸ்ரீமத் வால்மீகி

## இராமாயண வசனம்.

பண்டித நடேச சாஸ்திரியாரால்
தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு
தகுந்த தமிழ் வித்துவான்களால் பார்வையிடப்பட்டு
பிழையறப் பரிசோதித்துப் பிரசுரம் செய்யப்பட்டது.

இப்பதிப்பின் விசேஷம்

தமிழிற் கம்பர் முதலிய மகாகவிகள் இராமாயணத்தை இயற்றி யிருந்தபோதிலும், செய்யுள் நடையை அறிந்து படித்து ஆனந்திக்கிறவர்கள் வெகு கொஞ்சமாயிருக்கிறபடியால் ஸ்திரீகளும், சிறுவர்களுங்கூட எளிதில் தெரிந்துகொள்ளும்படியாகத் தெளிவான எளிய நடையில் வசனரூபமாய் இவ் வால்மீகி ராமாயணம் எழுதப்பட்டிருக்கிறது.

இப்பதிப்பு இதன் ஆதிகிரந்தத்தின் கௌரவத்திற்கும் மகிமைக்கும் தக்கவாறு கனமான உயர்ந்த காகிதத்தில் பெரிய எழுத்தில் நன்றாய்ப் பரிசோதித்து, வெகுபொருள் செலவிட்டு, சிரத்தையுடன் மிகச்சிறப்பாய் அச்சிட்டு அழகாய்ப் பயிண்டு செய்திருக்கிறது.

| | | | |
|---|---|---|---|
| பாலகாண்டம் | 244 பக்கம் | | 6 காண்டம் |
| அயோத்தியாகாண்டம் | 501 | ,, | |
| ஆரணியகாண்டம் | 254 | ,, | |
| கிஷ்கிந்தாகாண்டம் | 226 | ,, | ரூ 15 |
| சுந்தரகாண்டம் | 260 | ,, | |
| யுத்தகாண்டம் | 702 | ,, | |
| சுந்தரகாண்டம் தனியே | | | ரூ. 2 4 0 |

**கே. மஹாதேவன்,** புஸ்தக வியாபாரம்,
1, ராமசாமிபிள்ளை தெரு, வேப்பேரி, சென்னை

ஏமாங்கதத்து
## இளவரசன்
PRINCE OF YEMANGADA
T. N. சேஷாசலம் B.A.B.L., இயற்றியது.

அன்பனின் உயிர்காக்க ஆணுடை தரித்துத் தேர் நடத்திய வீரமகள் பஞ்சரவல்லி செய்த சாகசங்களும், அறிவிலாப புன்கவி ஒருவன் படுத்தியபாடும், வாய்மைநெறி ஒரு புறமும் தன்மகன்மேலிருந்த வாஞ்சை மறுபுறமும் பிடித்திழுக்கத் திகைப்புற்ற வேந்தன் செய்த சில செயல்களும், ஆசைபுகுந்து அறிவழிக்க ஒரு சேனைத்தலைவன் சிந்தித்த சூழ்ச்சிகளும், கற்பிற்கரசியாய அசோகவதி தன் கணவனின் பிழைகளைப் பாராட்ட நினையாத வண்ணமும், சுவை பல கலந்து அழகோடமைந்த தமிழ் நடையினில் வரைந்துள்ள இக்கதை நூல் யாவரும் பன்முறை படித்து இன்புறுதற்கு இயன்றது. பள்ளிகளில் பாடமாக வைப்பதற்குமேற்றது.

விலை ரூ. 1 0 0

வேண்டுவோர்:—

**பி. ஜி. பால் & கம்பெனி,**
**பப்ளிஷர்ஸ்,**
2, பிரான்ஸிஸ் ஜோஸப் தெரு,
ஜார்ஜ்டவுன், மதராஸ்.

## யுனைடட் இந்தியா லைப் அஷ்யுரன்ஸ்
(2) **கம்பனி, லிமிடெட்.**

ஹெட் ஆபீஸ்: சென்னை] [1906-ளூலத்தில் ஸ்தாபிக்கப்பட்டது.

பாலிஸிஹோல்டர்களுடைய ட்ரஸ்ட்
பண்ட் சுமார் ரூபா 25 லக்ஷம்.
சேர்மன்:—Sir. M. Ct. முத்தய்ய செட்டியார்.

நிர்ப்பயமானது, பேருதவிசெய்வது:—வட்டிக்கு விட்டிருக்கும் தொகையாவும் பத்திரமாயிருப்பதும், பாலிஸிஹோல்டர்களுக்கு வேண்டிய உதவி அன்போடு ஒழுங்காகச்செய்து தருவதும் இந்த யுனைடட் இந்தியா கம்பனிக்கு உள்ள சில முக்கிய அங்கங்கள்.

யுனைடட் இந்தியா கம்பனி சென்னையில் இருப்பது. ஆனால் அதன் கீர்த்தி இந்தியா முழுவதும் பரவியுள்ளது. உயிர் அஷ்யுரன்ஸ் கம்பனிகளில் இந்த யுனைடட் இந்தியா கம்பனியானது, "மிகுந்த பலமானதென்றும் பழுதற்றதென்றும் ஒழுங்காயும் மட்டுதிட்டக் கவனத்தோடும் நடத்தப்படுவது" என்றும், இந்த விஷயங்களைச் சீர்தூக்கி அறியவல்ல பேரறிஞர் வேறுமாகாணத்தைச் சேர்ந்தவர் கருதுகின்றார்.

காலதாமதம் செய்யாமல் சேரவேண்டியதை அவரவர்களுக்குச் செலுத்திவிடுவது: காரியங்களை மிக்ககவனத்தோடு நிர்வாகம் செய்வது. தாராளமாயும் நியாயமாயும் ஏற்படுத்தியிருக்கின்ற பாலிஸி நிபந்தனைகள்: மிதமான பிரீமிய கட்டணம்: தகுந்த போனஸ்: இவைகளும் இவைபோன்ற வசீகரமான மற்ற குணங்களும் யுனைடட் இந்தியா கம்பனியை ஒருவிதத்திலும் குறைவில்லை என்று ஜனங்கள் கொண்டாடத் தக்க ஒரு உயிர் அஷ்யுரன்ஸ் கம்பெனியாகச் செய்து வைத்து இருக்கின்றன.

முக்கியமாக தென் இந்திய ஜனங்களுக்கு உபயோகம் ஆகும்பொருட்டு ஏற்படுத்தியிருப்பது தென்னிந்தியா முழுவதிலும் இந்த யுனைடட் இந்தியா கம்பனி ஒன்றுதான் என்று சொல்லலாம். மிக்க ஒழுங்காகவும் அனுதாபத்தோடும் இங்கே தன் வேலையைச் செய்து வரவேண்டுமென்று இந்தக் கம்பனி எப்பொழுதும் கண்ணும் கருத்துமாய் இருக்கின்றது.

இதைப்பற்றி முழுவதும் தெரிந்துகொள்ள வேண்டுவோர்க்குக் கேட்டவுடனே யாவும் தெரியப்படுத்துவோம்.

தபால் பெட்டி 281,
10, மக்லீன் தெரு, சென்னை.

ஸ்டார் அண்டு கம்பனி
மானேஜர்கள்.

(1). இண்டஸ்டிரியல் & புருடன்ஷியல் அஷ்யூரான்ஸ் கம்பெனி, லிமிடெட்.

[1913
ஸ்தாபனம்] தலைமை ஆபீஸ் : பம்பாய்.

நன்கு மதிக்கப்பெற்று விருத்தியடையும்

இந்திய லைப் ஆபீஸ்.

போர்டு ஆப் டைரக்டர்கள்.

Sir. லல்லுபாய் ஸமால்தாஸ் K. T. C. I. E. (சேர்மன்)
Sir. ஹுகும் சந்து ஸரூப் சந்து K. T.
மோடிலால் C ஸேதால்வொட், அட்வகேட் பம்பாய்.
Sir. சிமன்லால் H. ஸெதால் வாட் K. C. I. E.
வேல்ஜி லக்ஷிமி B. A. L. L. B.
லால்ஜி நாராயண்ஜி J. B. மில் சொந்தக்காரர்.

கம்பெனியின் முதல் இரண்டு சேர்மன்களும், காலஞ்சென்ற ஸர். பிரோஸிஷா எம். மேத்தா M. A. L L. D. K. C. I. E. யும் காலஞ்சென்ற ஸபூர்ஜி புரோச்சா K. T.

செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 2,21592.
வசூலிக்கப்படாத மூலதனம் ரூ. 16,25000.

1. பறி முதல் செய்யப்படாத இயற்கையாகவுள்ள உரிமைகள்
2. பாலிஸிஹோல்டர்களே நேரில் கண்காணிப்பதற்காக அவர்களுக்கு இரண்டு டைரக்டர்கள் தேர்ந்தெடுக்க உரிமை.
3. குறைந்த அளவு செலவு.
4. பாத்யதைகளை உடனுக்குடன் பைசல் செய்வது.

நல்ல கமிஷனில் வேலை செய்ய, எல்லா விடங்களுக்கும் ஏஜண்டுகள் தேவை.
விவரங்களுக்கு எழுதவும்:—

நாராயிண் தாஸ் கிர்தர்தாஸ்,
உள்ளூர் மானேஜர்,
நெ. 10 மக்ளீன் தெரு, மதராஸ்.



Dr. Orison Swett Marden's
World-Famous Inspirational Books

(3) TEACH AND TRAIN YOU

To discover what career you are best fitted for ; To succeed in your chosen calling ; To overcome shyness, timidity, fear, vacillation and lack of confidence; To be healthy, happy and successful.

GETTING ON

CONTENTS:—The Precedent Breaker—No Chance—Your fortune is in yourself—A cheery disposition—How to be popular?—Physical vigour and achievement—Burn your bridges behind you—Emergencies, the test of ability—Go into business for yourself—The stimulus of rebuffs—Gentleness *versus* Bluster—The miracle of polite persistency—Clear grit did it—System in business—The tragedy of carelessness—Put new blood into your business—A vacation as an investment—Time tossers — Diverted by salary — Mere money-making is not success.

RISING IN THE WORLD

CONTENTS:—Wanted a man—Dare—The will and the way—Uses of obstacles—One unwavering aim—Self-help—Clear grit—Rich without money—Opportunities where you are—The might of little things—Nature's little bill—Choosing a vocation—The man with an idea—Decision—The curse of Idleness.

SELF-INVESTMENT

CONTENTS:—If you can talk well—Enjoying what others own—Personality as a success asset—How to be a social success—The miracle of Tact—Ambition—Education by reading—Reading a spur to ambition—The self-improvement habit—The raising of values—Public speaking—Self-reliance.

HE CAN WHO THINKS HE CAN

CONTENTS:—He can who thinks he can—Getting aroused—Education by absorption—Freedom at any cost—What the world owes to dreamers—Responsibility develops power—An over-mastering purpose—Has your vocation your unqualified approval?—Happy, if not, why not?—Sizing up people—What has luck done for you?—Success with a flaw—Getting away from Poverty

PEACE, POWER AND PLENTY

CONTENTS:—The power of the mind to compel the body—Poverty, a mental disability—The law of opulence — Health-building during sleep — Health through right thinking—Mental chemistry—Imagination and health—How suggestion influences health—Why grow old?—The miracle of self-confidence—Destructive suggestion—Worry, the disease of the age—Fear, the curse of the race—Self-control—Good cheer, God's medicine

EVERY MAN A KING

CONTENTS:—Steering thought prevents life-wrecks—How mind rules the body—Thought, cause of health and disease — Killing emotions — Mastering our moods—Cheerful thinking—Negative creeds paralyse—Affirmation creates power—Thoughts radiate as influence—How thinking brings success?—Power of self-faith—Building character—Strengthening deficient faculties—The power of imagination—The coming man.

THE SECRET OF ACHIEVEMENT

CONTENTS:—Moral sunshine—"Blessed be drudgery"—Honesty, as Principle and as Policy—Habit the servant, the master — Trifles — Courage — Self-control—The School of Life—Being and Seeming—Decide—Tenacity of purpose—Purity is power.

THE MIRACLE OF RIGHT THOUGHT

CONTENTS:—The divinity of desire!—Success and happiness—Working for one thing and expecting something else—Expect great things of yourself—Self-encouragement — The crime of the "Blues" Change the thought, change the man—The paralysis of fear—One with the divine—Getting in tune—New way of bringing up children—Training for longevity.

**Special Indian Edition Rupee 1-8-0 each**

V. KALYANARAM IYER & Co.,
BOOK-SELLERS AND PUBLISHERS, VEPERY, MADRAS.


Printed at the B. N. Press, Mount Road and Edited and Published by Mr. E. Kumariah, B.A., B.L.